புதுமலர்: 19 இதழ்: 05 புரட்டாதி - ஐப்பசி

ஆசிரியர்:
போதகர் வே.மகாராஜா

# அனல்

01.09.2022

அசதியாயிராமல் ஜாக்கிரதையாயிருங்கள்
ஆவியிலே **அனலாயிருங்கள்:**
கர்த்தருக்கு ஊழியம் செய்யுங்கள்.
- ரோமர் 12:11 -

# இரட்சிப்பும்
## திருமுழுக்கு ஞானஸ்நானமும்



சீயோன் தேவாலயப் பிரசுரம் Zion Church Publication

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொருளடக்கம்


01. அனலின் குரல்
02. கதையும் கற்றதும்
03. வினா விடை - 111
04. நற்செய்திப்பகுதி
05. குறுக்கெழுத்துப்போட்டி - 109
06. வாலிபர் வளாகம்
07. பெண்கள் பக்கம்
08. சிறுவர் வட்டம்
09. அருட்பணியாளர் சரிதை
10. அனலின் ஆன்மீக விருந்து
11. யாருக்கு நன்றி




## ஜெப வேண்டுதல்

வியாதியினாலும், வேதனையினாலும், குடும்ப பிரச்சினையினாலும் கலக்கமுற்று என்ன செய்வது என்று அறியாமல் திகைக்கும் தாயே, தந்தையே, சகோதரனே, சகோதரியே கலக்கம் வேண்டாம். உங்கள் பிரச்சினைகளையும் தேவைகளையும் எங்களுக்கு எழுதுங்கள். உங்களுக்காக ஜெபிப்போம்.

### எழுத வேண்டிய முகவரி:


**சீயோன் ஜெபக்குழு,**
**இல 29, 29/1,**
**இராமையாச் செட்டியார் ஒழுங்கை,**
**யாழ்ப்பாணம், இலங்கை.**

Zion Prayer Group,
No: 29, 29/1 Ramaiah Chettiar Lane,
Jaffna, Sri Lanka.


### மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:


ஆசிரியர் "அனல்",
இல 29, 29/1, இராமையாச் செட்டியார் ஒழுங்கை,
யாழ்ப்பாணம், இலங்கை.

The Editor "Anel",
No: 29, 29/1 Ramaiah Chettiar Lane,
Jaffna, Sri Lanka.

T.P.: 0094(0) 21-222 2707 e-mail: jazion@sltnet.lk


திக்கற்றவர்களாய் போகும் உன் பிள்ளைகளை ஒப்புவி, நான் அவர்களை உயிரோடே காப்பாற்றுவேன். உன் விதவைகள் என்னை நம்புவார்களாக - எரேமியா 49:11 -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனலின் குரல்



இயேசு இரட்சகரின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்!

எத்தனையோ கடினமான நிலைகளைக் கடந்து இவ் வருடத்தின் நடுப்பகுதிகளைக் கடந்து வந்திருக்கின்றோம். சூழ்நிலை எதுவானாலும் மாறாத தேவன் எம்மை மறவாமல் நினைத்து நடத்தி வருகின்றார்.

தேவன் எமக்கு அனுமதித்த பாதையில் நடப்பதும் அவர் நியமித்த இடத்தில் வாழ்வதும் சிறந்தது. இப் பூமியில் முப்பத்து மூன்றரை வருடங்கள் மனிதனாக வாழ்வதை இயேசு தெரிந்து கொண்டார். அந்த தாழ்வை அவர் ஏற்றுக் கொண்டதனால் தான் எம்மை உயர்வுக்கு கொண்டு சென்றார்.

'மனிதர்கள் கடினமான காரியங்களை நேருக்கு நேர் சந்திப்பது பள்ளத்தாக்கிலேதான்' என ஒரு தேவனுடைய ஊழியர் கூறினார். அத்துடன் 'கீழே தாழ்விலே எப்படி வாழ்கின்றோம் என்பதில் தான் பரிசுத்தவானின் வல்லமை அடங்கியிருக்கிறது' என்றார்.

எனவே நாம் வாழும்படி தேவன் அனுமதித்த இழிவான பகுதியில் நாம் எவ்வளவு தேவனுக்கு உண்மையுள்ளவர்கள் என்பதைக் கண்டு கொள்ள முடியும்.

உறுதியான அர்ப்பணிப்புடன் தேவபாதம் அமர்வோம். பொல்லாத உலகின் போக்கில் அல்ல மாறாக அவ்விடத்தில் இருந்து பரலோகத்துக்கு சாட்சியாவோம்.

- ஆசிரியர் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# கொடுத்த வாக்கு

வை. விமலதாஸ்

ஒரு நாள் குளிர் மிகுந்த இரவில் வசதியானவர் ஒருவர் நகரத்தின் தெருவில் சென்று கொண்டிருந்தார். அப்போது அங்கே வயதான ஒரு ஏழை மனிதனை சந்தித்தார். அன்று இரவு நிலவிய குளிரான காலநிலை எல்லோரையும் விறைக்கச் செய்து கொண்டிருந்தது. ஆனால் அந்த ஏழை மனிதன் கடுமையான அக் குளிரின் மத்தியிலும் கோட் எதுவும் அணியாமல் நின்று கொண்டிருந்தார்.

இதைப் பார்த்த அந்த வசதியானவர் தன் பயணத்தை நிறுத்தி அந்த ஏழைமனிதனிடம் சென்று அவரிடம், 'வெளியில் இவ்வளவு குளிர்ச்சியாக இருக்கிறதே, நீங்கள் ஏன் ஒரு கோட் கூட அணியவில்லை!' என்று கேட்டார்.

அதைக் கேட்ட அந்த ஏழை முதியவர் சொன்னார், 'ஐயா என்னிடம் கோட் இல்லை, ஆனால் இந்தக் குளிர் எல்லாம் எனக்கு பழக்கமாகிவிட்டது' என்றார்.

இதைக் கேட்ட அந்த வசதியானவர் 'எனக்காக காத்திருங்கள், நான் எனது வீட்டிற்குச் சென்று உங்களுக்காக ஒரு கோட் எடுத்து வருகிறேன்' என்றார்.

அப்போது அந்த வயதான ஏழை மிகவும் மகிழ்ச்சியடைந்தார். எனக்காக கரிசனைப்படவும் ஒருவர் இருக்கிறார் என்று நினைத்து தனக்குள் மெச்சிக் கொண்டார். 'ஐயா, நானும் உங்களுக்காக காத்திருக்கிறேன்' என்று மகிழ்ச்சியுடன் சொன்னார்.

வசதியானவரும் தனது வீட்டிற்குச் சென்றார். ஆனால் அந்த தெருவில் நின்ற ஏழை வயதான மனிதருக்கு தான் கொடுத்த வாக்குறுதியை தனது வேலை மிகுதியால் மறந்து இரவு தூங்கச் சென்றுவிட்டார். மறு நாள் காலையில் எழுந்த பின்னர் தான் அவருக்கு தான் தெருவில் சந்தித்த அந்த ஏழை முதியவரின் நினைவு வந்தது.

ஐயையோ! மறந்துவிட்டேனே, என்று சொல்லிக்கொண்டே அந்த ஏழை மனிதரைக் கண்டுபிடிக்க கோட்டையும் எடுத்துக் கொண்டு அந்த தெருவுக்கு ஓடிச்சென்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர் அந்த ஏழை முதியவரை சந்தித்த இடத்திற்கு சென்ற போது அங்கே மக்கள் கூட்டமாக நின்று கொண்டிருந்தார்கள். ஓடிச் சென்று எட்டிப்பார்த்த போது அந்த முதியவர் குளிர் தாங்க முடியாமல் அந்த இரவிலேயே இறந்துவிட்டிருந்தார்.

ஆனாலும் அந்த முதியவர் அந்த இரவில் ஒரு கடிதத்தை எழுதி வைத்து விட்டுத்தான் இறந்திருந்தார்.

அவரின் கடிதத்தை எடுத்து படித்த போது அதில் இவ்வாறு எழுதியிருந்தது; 'என்னிடம் கதகதப்பான ஆடைகள் இல்லாத போது, குளிர்ச்சியை எதிர்த்துப் போராடும் மனவலிமை எனக்கு இருந்தது. ஆனால் நீங்கள் எனக்கு உதவுவதாக உறுதியளித்த போது, உங்கள் வாக்குறுதியை நம்பி என் மனவலிமையை இழந்துவிட்டேன்.... என்று தொடர்ந்து சென்று கொண்டிருந்தது.

ஆம் நண்பர்களே இவ் வருடத்தின் இறுதிப் பகுதியை நெருங்கிக் கொண்டிருக்கும் நாம் எமது வாழ்வை சற்று சிந்தித்துப் பார்ப்போம். நாமும் கூட எத்தனையோ பேருக்கு எத்தனையோவிதமான வாக்குறுதிகளையும் நம்பிக்கை களையும் கொடுத்துவிட்டிருப்போம். ஆனால் அவைகளை நாம் நிறைவேற்றி இருக்கிறோமா? எம்மால் ஒன்றை செய்ய முடியாது என்று தெரிந்தால் அதை செய்வோம் என்று ஒரு போதும் வாக்குறுதி கொடுக்கக்கூடாது. இது பெரிய காரியங்களில் மட்டுமல்ல சிறிய காரியங்களிலும் நாம் கொடுத்த வாக்கை காப்பாற்ற வேண்டும். கொடுத்த வாக்கை காப்பாற்ற முடியாவிட்டால் எதையும் உறுதியளிக்காதீர்கள். இது உங்களுக்கு அவசியமில்லாமல் இருக்கலாம். ஆனால் அது வேறொருவருக்கு எல்லாமுமாக இருக்கலாம்.

**நீதிமொழிகள் 25:14 கொடுப்பேன் என்று சொல்லியும் கொடாமலிருக்கிற வஞ்சகன் மழையில்லாத மேகங்களுக்கும் காற்றுக்கும் சரி.**

---

**குறுக்கெழுத்துப் போட்டி – 108**

**சரியான பதில்கள்**

**இடமிருந்து வலமாக**

01. சாமுவேல் – 1சாமு 12:23
05. இஸ்போசேத் – 11சாமு 4:9
08. கீதரோன் – 1இராஜா 15:13
09. நீதிமான் – நீதி 13:5
11. சாந்தம் – கலாத் 6:23
12. அபினதாப் – 1நாளா 2:13

**வலமிருந்து இடமாக**

02. யோசபாத் – 11நாளா 18:4
03. எலியேசர் – யாத்தி 18:4
06. தானியேல் – தானி 8:18
10. வார்த்தை – சங்கீதம் 33:4
13. மகிமை – நீதி 19:11

**மேலிருந்து கீழாக**

01. சாதோக் – 11சாமு 15:29
02. யோனத்தான் – 1நாளா 8:34
04. அத்தாலியாள் – 11இராஜா 11:15
07. ஓசெயா – 11இராஜா 17:1

**கீழிருந்து மேலாக**

07. ஓர்மா – எண் 21:3
11. சாபங்கள் – நீதி 28:27
12. அகாஸ்வேரு – எஸ்தர் 5:3
13. மனோவா – 1நாளாக 13:22



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஜெபத்தைக் கேட்பவர்

❒ பர்னபா




கிறிஸ்துவுக்குள் அன்பின் அனல் வாசகர்களுக்கு எனது வாழ்த்துக்கள்! மறுபடியும் நற்செய்தி பகுதியினூடாக உங்களை சந்திப்பதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன். தேவன் எம்மேல் வைத்த அன்பினாலே நாம் குறைவற்றவர்களாக காணப்படுகிறோம். ஆண்டவருக்கே மகிமை. மோசமான பொருளாதார நெருக்கடி நிறைந்த இந்த காலங்களிலும் கூட கர்த்தர் நம்மை நித்தமும் விசாரித்து நடத்தி வருகின்றார். தொடர்ந்தும் அப்படியே செய்வார் – ஆமென்.

**சங்கீதம் 65:2 ஜெபத்தைக் கேட்கிறவரே. மாம்சமான யாவரும் உம்மிடத்தில் வருவார்கள்.**

தேவனுடைய மனுஷன் தாவீது தன் வாழ்க்கையில் பல வேதனை நிறைந்த சூழ்நிலைகளுக்கு முகங்கொடுக்கிறார். ஆனால் எல்லாவற்றிலும் தேவ கிருபையினாலே ஜெயத்தைப் பெற்றுக் கொள்கின்றார். ஏனெனில் 'ஜெபத்தைக் கேட்கிற ஒருவர் இருக்கிறார்' என்பதே. ஆதலால் தான் 'ஜெபத்தைக் கேட்பவரே!' என்று மிகவும் விசுவாசம் நிறைந்த தைரியத்தோடு சொல்கின்றார்.

**11சாமுவேல் 15:31-32 (31.) அப்சலோமோடே கட்டுப்பாடுபண்ணினவர்களுடன் அகித்தோப்பேலும் சேர்ந்திருக்கிறான் என்று தாவீதுக்கு அறிவிக்கப்பட்டபோது, தாவீது: கர்த்தாவே, அகித்தோப்பேலின் ஆலோசனையைப் பயித்தியமாக்கிவிடுவீராக என்றான். 32. தாவீது மலையின் உச்சிமட்டும் வந்து, அங்கே தேவனைப் பணிந்துகொண்டபோது, இதோ, அற்கியனாகிய ஊசாய் தன் வஸ்திரத்தைக் கிழித்துக்கொண்டு, தலையின்மேல் புழுதியைப் போட்டுக்கொண்டவனாய் அவனுக்கு எதிர்ப்பட்டான்.**

ஆம் பிரியமானவர்களே இது இராஜாவாகிய தாவீதின் வாழ்க்கையில் ஓர் ஆபத்தான கட்டம். மாம்சமான யாவரும் உம்மிடத்தில் வருவார்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றபடியே தாவீது மலையில் தேவனிடம் ஜெபிப்பதைப் பார்க்கிறோம். அனேக வேளைகளில் எமக்கு உண்டாகும் ஆபத்துக்களில், வேதனை நிறைந்த சூழ்நிலைகளில் மாம்சமானவர்களிடத்தில் அடைக்கலம் தேடுகின்றோம். மட்டுமல்ல மாம்சமானவர்களை எம் நம்பிக்கையாக வைக்க முற்படுகின்றோம்.

தாவீதிடம் சகல ஆட்பலமும் நிறைந்து காணப்பட்டது. மனபலமுண்டு, பலசாலிகள் அனேகர் அசாதாரண மானவர்கள். ஆனாலும் ஆபத்து, யுத்தம், பிரச்சினை, எதிர்பாராத வேதனை என்ற போது தாவீது 'கர்த்தாவே' என்று மட்டுமே கூப்பிடுகின்றார்.

எனக்கு அன்பான சகோதர சகோதரிகளே, பெரியவர்களே, உங்கள் வாழ்க்கையின் பகுதிகளில் நீங்களும் பலதரப்பட்ட நெருக்கடிகளுக்கூடாக கடந்து சென்று கொண்டிருக்கலாம். 'மாம்சமான யாவரினதும் ஜெபத்திற்கு பதில் கொடுப்பவரை நோக்கிப்பாருங்கள்' அவர் உங்கள் ஜெபத்திற்கு பதில் தருவார். மாம்சமானவர்களை நோக்காதிருங்கள். இதுவரையும் அப்படிப்பட்ட சிந்தையோடு நீங்கள் இருந்திருந்தால் இன்றைக்கே ஜெபத்தைக் கேட்பவரிடம் முகத்தை திருப்புங்கள்.

**சங்கீதம் 66:20 என் ஜெபத்தைத் தள்ளாமலும், தமது கிருபையை என்னைவிட்டு விலக்காமலும் இருந்த தேவனுக்கு ஸ்தோத்திரமுண்டாவதாக.**

ஆம் பிரியமானவர்களே தேவன் தம்மை நோக்கி கூப்பிடும் யாரையும் தள்ளமாட்டார்; அவர்கள் சத்தத்தை புறக்கணிக்கமாட்டார்.

இருதயம் நொந்தவர்களாக கண்ணீர் வடிக்கும் மகனே! மகளே! உன் சத்தத்தைக் கேட்பவர் இருக்கிறார்.

துக்கத்தோடே இவனைப் பெற்றேன் என்று சொல்லி தாய் யாபேஸ் என்று தன் பிள்ளைக்கு பெயரை வைக்கின்றாள். யாபேஸ் என்பதன் அர்த்தம் என்னவென்றால்; வேதனையுடன் பிறந்தவன் என்பதே.

இன்று அனேகர் வேதனைகள் அவர்களின் வாழ்க்கையின் ஒரு பகுதியாக அல்லாமல் முழு வாழ்க்கையாகவே இருப்பதனால் சோர்ந்து போய்விடுவதுண்டு. பெற்றோரை குறைகூறுபவர்கள் உண்டு, குடும்பத்தை குறித்து, பிறப்பைக் குறித்து வேதனைப்பட்டு பேசித்திரிவதுண்டு.

ஆனாலும் **1நாளாகமம் 4:10 யாபேஸ் இஸ்ரவேலின் தேவனை நோக்கி: தேவரீர் என்னை ஆசீர்வதித்து, என் எல்லையைப் பெரிதாக்கி, உமது கரம் என்னோடிருந்து, தீங்கு என்னைத் துக்கப்படுத்தாதபடிக்கு அதற்கு என்னை விலக்கிக் காத்தருளும் என்று வேண்டிக் கொண்டான்; அவன் வேண்டிக்கொண்டதைத் தேவன் அருளினார்.**

**1நாளாகமம் 4:9a யாபேஸ் தன் சகோதரரைப்பார்க்கிலும் கனம் பெற்றவனாயிருந்தான்.**

ஆம் பிரியமானவர்களே துக்கத்தோடே பிறந்தவன், அதற்கு அடையாளமானவன் எப்படி கனம் பெற்றவனாக மாறினான்; 'ஜெபத்தைக் கேட்பவரை நோக்கிப் பார்த்ததனால் அல்லவா?'


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலடியானவள் என எல்லாரிடமும் பட்டம் பெற்ற அன்னாள் ஏழு பிள்ளைகளின் தாயானாளே! எப்படி இது நடந்தது? 'ஜெபத்தைக் கேட்பவரை நோக்கிப் பார்த்ததனால் அல்லவா?

ஆம் கிறிஸ்துவுக்குள் அன்பான சகோதரனே, சகோதரியே இன்றைக்குத் தான் முதல் முறையாக இவ் புத்தகத்தை வாசிக்கும் மனிதனே! நீங்கள் யாராக இருந்தாலும் பரவாயில்லை. உங்கள் வேதனையின் அளவைப் பார்க்கிலும் இயேசு பெரியவராக இருக்கிறார். கலங்காதீர்கள்! திகைக்காதீர்கள்!

தாவீது இராஜாவைப் போல, யாபேசைப் போல, அன்னாளைப் போல மாம்சமான யாவருடைய ஜெபத்தையும் கேட்பவரை நோக்கிப் பாருங்கள்.

வாழ்க்கையில் ஆறுதலடைவீர்கள்! சுகம் பெறுவீர்கள்! விடுதலை காண்பீர்கள்! வாழ்வில் நிம்மதி பெறுவீர்கள்!



# வினா விடை - 111

01. 'தேசத்தின் நன்மையைப் புசிப்பீர்கள்' என்று வாசிப்பதெங்கே?

02. 'நன்மைக்குத் தீமையைச் சரிக்கட்டலாமே' என்று வாசிப்பதெங்கே?

03. 'பெற்றார் செய்த நன்மைகளுக்குப் பதில் நன்மைகளைச் செய்யக் கற்றுக் கொள்ளக் கடவர்கள்' என்று வாசிப்பதெங்கே?

04. 'இப்போது சமாதானத்தோடே திரும்பிப் போய்விடு' என்று சொன்னது யார்?

05. 'நீங்கள் என்றென்றைக்கும் மகிழ்ந்து களிகூர்ந்திருங்கள்' என்றது யார்?

06. 'தீமை செய்யப் பழகின நீங்களும் நன்மை செய்யக்கூடும்' என்று வாசிப்பதெங்கே?

07. 'சத்தியத்தையும் சமாதானத்தையும் சிநேகியுங்கள்' என்றது யார்?

08. 'நன்மைக்குப் பதிலாக அவன் எனக்குத் தீமை செய்தான்' என்று சொன்னது யார்?

09. 'என் ஊழியக்காரர் மனமகிழ்ச்சியினாலே கெம்பீரிப்பார்கள்' என்று வாசிப்பதெங்கே?

10. 'நீ முழு இருதயத்தோடும் மகிழ்ந்து களிகூரு' என்று வாசிப்பதெங்கே?





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | | 02 | | | | | | |
| | | | 03 | | | | | |
| | | | | | | | | 04 |
| | 06 | | | 05 | | | | |
| | | 07 | | | | 08 | | |
| | | | | 10 | | | | 09 |
| | 11 | | | 12 | | | | |
| | | | | 13 | | | | |
| 14 | | | | | | | | 15 |

## இடமிருந்து வலமாக

# குறுக்கெழுத்துப் போட்டி 109

02. தன் குமாரனின் அங்கியைக் கண்டு புலம்பியவன்
03. இவன் உயிரோடிருக்கையில் தன்னை நினைவு கூரும்படி ஒரு தூணை அடையாளமாக நிறுத்தினான்
05. ஞானவான்களுடைய ...................... ஜீவஊற்று; அதினால் மரணக்கண்ணிகளுக்குத் தப்பலாம்
08. கல்மழை பொழிந்தும் இந்த நாடு பாதிக்கப்படாதிருந்தது
12. சமஸ்த இஸ்ரவேல் ஜனங்களுக்குள்ளும் இவனுக்கு சமனானவன் இல்லை என சாமுவேலால் சொல்லப்பட்டவன்
13. தாமார் யூதாவுக்குப் பெற்ற இரட்டைப் பிள்ளைகளில் ஒருவன்
14. இவன் தலையை அப்னேரின் கல்லறையில் அடக்கம் பண்ணினார்கள்

## வலமிருந்து இடமாக

04. தீமைக்குச் சரிக்கட்டுவேன் என்று சொல்லாதே; கர்த்தருக்குக் .................... அவர் உன்னை இரட்சிப்பார்
07. மோவாப் தேசத்தின் இரண்டு வலிமையான சிங்கங்களைக் கொன்றவன்
09. இவன் எபிரோனில் யூதா கோத்திரத்தின் மேல் ஏழரை வருடங்கள் ராஜாவாயிருந்தான்
15. அப்சலோமின் பட்சம் சாயாதவனாயிருந்தும் அதோனியாவின் பட்சம் சாய்ந்திருந்தவன்

## மேலிருந்து கீழாக

01. 'எனக்காக அந்த ஜனத்தை சபிக்க வேண்டும்' எனக்கூறிய ராஜா
03. இப் பட்டணத்தில் சீஷர்களுக்கு கிறிஸ்தவர்கள் என்ற பெயர் முதல் முதல் வழங்கப்பட்டது
07. இவன் யூதா மனுஷரின் 120000 பேரை ஒரே நாளில் கொலை செய்தான்
10. கர்த்தருடைய வார்த்தையை இன்றைக்கு விசாரித்து அறியும் என்று ஆகாபிடம் கூறியவன்
11. எலிமெலேக்கின் சுதந்திரத்தை தன் கையிலே வாங்கிக் கொண்டவன்

## கீழிருந்து மேலாக

06. அகசியாவின் சகோதரியாகிய இவள் யோவாசைக் காப்பாற்றினாள்
07. இயேசு இந்த ஊரிலிருந்து புறப்பட்டு வரும் வழியில் இருந்த அத்திமரத்தை சபித்தார்
14. இவர் எரேமியாவின் தந்தை
15. தன் கோலின் நுனியினாலே கொஞ்சம் தேன் எடுத்து ருசி பார்த்தவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிம்சோன்

# Samson

போதகர் வை.தேவதாஸ்




கிறிஸ்துவுக்குள் அன்பான சகோதர சகோதரிகளே இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் நல் வாழ்த்துக்கள். நீங்கள் அனைவரும் சுகத்துடனும் பாதுகாப்புடனும் இருப்பதற்கு ஆண்டவர் தாமே உங்களுக்கு உதவி செய்வாராக.

தற்பொழுது நாம் நமது நாட்டில் பல பொருளாதார பிரச்சினைகளை சந்தித்து வருகின்றோம். எல்லாக் காரியங்களும் ஸ்தம்பித்த ஓர் நிலையில் நாம் காணப்படு கின்றோம்.

'என்னதான் ஆனாலென்ன; என் மீட்பர் உயிரோடுண்டு' என்ற பாடல் அடியைப்போல எல்லாவற்றிலும் இருந்து நம்மை மீட்டு எடுக்கும் கர்த்தர் நம்மோடு இருக்கிறார். அவர் நிச்சயம் நம்மை தூக்கி எடுப்பார்.

இவ் வாலிபர் பகுதியில் சிம்சோனைக் குறித்த வேத பாடங்களை தியானித்து வருகிறோம். அப் பாட வேளைக்குள் செல்வதற்கு முன்பாக பரிசுத்த வேதாகமத்தில் இருந்து ஒரு வேத வசனத்தை உங்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

**யோவான் 14:18 நான் உங்களைத் திக்கற்றவர் களாக விடேன், உங்களிடத்தில் வருவேன்.**

ஆம் பிரியமானவர்களே, கர்த்தர் நம்மை திக்கற்ற வர்களாகவிடவேமாட்டார். அவர் நம்மிடத்தில் வருகின்ற தெய்வமாக இருக்கிறார். எந்த சூழ்நிலையிலும் திக்கற்ற வர்களாக அலைந்து திரிய அவர் விடவேமாட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திக்கற்றவர்கள் என்பது 'அநாதைகள் அல்லது யாருமற்றவர்கள்' எனப்பொருள்படும். இருப்பினும் இங்கே யோவான் 14:18இன் படி 'நான் உங்களைத் திக்கற்றவர் களாகவிடேன்' என்பதன் ஆங்கில வேதாகமத்தின் அர்த்தர் யாதெனில் 'நான் உங்களை ஆறுதலற்றவர்களாகவிடேன்' என்பதாகும்.

ஆம் பிரியமானவர்களே, இந் நாட்களில் நீங்கள் ஆறுதலை இழந்தவர் களாக காணப்படலாம். ஆனால் தேவனின் வாக்குத்தத்தத்தை மறவாதிருங்கள். அவர் உங்களை ஆறுதலற்றவர்களாக விடவேமாட்டார்.

இன்றைக்கும் பலர் குறிப்பாக வாலிபர்கள் பல விதங்களிலும் குழம்பிய வர்களாக ஆறுதலுக்காக பல இடங்களை நாடிச் செல்கின்றார்கள். சிலர் மதுபானங்களையும், சிலர் போதை வஸ்துக்களையும், சிலர் சினிமாக்களையும், சிலர் விபச்சார விடுதிகளையும் நாடிச் செல்கின்றனர். அங்கே அல்ல ஆறுதல், அவைகள் மேலும் மேலும் குழப்பத்தையே கொண்டு வரும்.

ஆனால் இயேசு சொல்கிறார்: 'நான் உங்களை ஆறுதலற்றவர்களாக விடேன்' ஆம் பிள்ளைகளே இன்றைக்கும் உங்கள் ஆண்டவர் உங்களை ஆற்றித்தேற்ற விரும்புகிறார். கவலைப்படாதிருங்கள். அவர் உங்களை ஆற்றித்தேற்றுவார். தொடர்ந்தும் சிம்சோனைக் குறித்த காரியங்களை சிந்திப்போம் வாருங்கள்.

சிம்சோனின் பெலவீனங்கள், தோல்விகளைக் குறித்து தொடர்ந்து கற்று வருகின்றோம். அந்த வகையில் அவர்,

1. பெண்ணாசையின் மயக்கம் நிறைந்த வாழ்க்கை வாழ்ந்தார்.

2. திடீரென முன்னேற வேண்டும்; இலகுவாக சம்பாதிக்க வேண்டும் என்ற விபரீத ஆசை கொண்டார்.

3. மீண்டும் மீண்டும் பெண் ஆசையில் சிக்கினார்.

என கடந்த இதழ்களில் விபரித்திருந்தேன். அத்தோடு அவர் மீண்டும் மீண்டும் பெண் ஆசையில் சிக்குவதற்கு காரணமாக முதலாவது அவரது பிரயாணங்கள் அமைந்ததனை உங்களுக்கு விளக்கியிருந்தேன்.

இவ் இதழிலும் அவர் மீண்டும் மீண்டும் பெண் ஆசையில் விழுவதற்கு காரணமாக அமைந்த இரண்டாவது விடயத்தைப் பார்ப்போம்.

## 2. அவரது பார்வை

மனிதர்கள் மட்டுமல்லாது எல்லா ஜீவன்களுக்கும் கண்கள் உண்டு. ஏனெனில் அவர்கள் வெளி உலகத்தைக் காணவேண்டிய தேவை உள்ளது. ஒரு மனிதனுடைய சரீரம் எவ்வளவு பெலமுள்ளதாக இருந்தாலும், எவ்வளவு அழகுள்ளதாக இருந்தாலும் அச் சரீரத்திற்கு விளக்காக தேவன் கண்களை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்துள்ளார். கண்ணானது சரீரத்தின் விளக்காயிருக்கிறது. உன் கண் தெளிவாயிருந்தால் உன் சரீரம் முழுவதும் வெளிச்சமாயிருக்கும்.

**மத்தேயு 6:22-23 (22.) கண்ணானது சரீரத்தின் விளக்காயிருக்கிறது; உன் கண் தெளிவாயிருந்தால், உன் சரீரம் முழுவதும் வெளிச்சமாயிருக்கும். 23. உன் கண் கெட்டதாயிருந்தால், உன் சரீரம் முழுவதும் இருளாயிருக்கும்; இப்படி உன்னிலுள்ள வெளிச்சம் இருளாயிருந்தால், அவ்விருள் எவ்வளவு அதிகமாயிருக்கும்!**

சரீரம் வெளிச்சமடைவதும், இருளடைவதும் கண்களிலேயே தங்கியுள்ளது. ஏனெனில் ஒரு மனிதனின் பார்வையிலேயே அவனது நற்பண்புகள் அடங்கியுள்ளது.

'பார்வை' என்பதற்கு ஆங்கிலத்தில் *Sight, Vision, View, Perspective* போன்ற பதங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளது.

தமிழில் பார்வை என்பதனை பல விதங்களில் நோக்க முடியும்.

1. கண்பார்வை - இதனை எட்டப்பார்வை, கிட்டப்பார்வை, தூரப்பார்வை எனச் சொல்ல முடியும்.
2. வரலாற்றுப் பார்வை - இதனை உளவியற்பார்வை, கருடப்பார்வை, கழுகுப்பார்வை, பருந்துப்பார்வை எனச் சொல்லலாம்.
3. பார்வையாளர், பார்வை நேரம், பார்வைத்திறண், பார்வை நரம்பு என பலதைக் காணலாம்.

இந்த மூன்று பார்வை விதங்களைவிட நான்காவது பார்வையும் உண்டு. அதனை இப்படிச் சொல்லலாம்.

04. கள்ளப்பார்வை, திருட்டுப்பார்வை, சோரப்பார்வை

இவ்விதமான பார்வைதான் வாலிப வாழ்க்கையை இருளுக்குள் விழுத்தக்கூடிய வல்லமை பெற்றவைகள்.

**நியாயாதிபதிகள் 14:1 சிம்சோன் திம்னாத்துக்குப் போய், திம்னாத்திலே பெலிஸ்தரின் குமாரத்திகளில் ஒரு பெண்ணைக் கண்டு.**

**நியாயாதிபதிகள் 16:1 பின்பு சிம்சோன் காசாவுக்குப் போய், அங்கே ஒரு வேசியைக் கண்டு.**

சிம்சோனின் கண்கள் எதனைக் கண்டது? யாரைக் கண்டது? சிந்தித்துப் பாருங்கள். ஒரு பெண்ணைக் காண்கின்றான்; அவளை அனுபவிக்க துடிக்கிறான்; பின்பு ஒரு வேசியைக் காண்கிறான்; அவளை அடையத்துடிக்கிறான். இது தான் சோரப்பார்வை அல்லது திருட்டுப்பார்வை எனக் குறிப்பிடுகிறேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவருடைய கண்கள் திருப்தியடையாத நிலையிலேயே இருந்துள்ளது. ஏனெனில் பரிசுத்த வேதாகமம் சொல்கிறது:

**பிரசங்கி 1:8 காண்கிறதினால் கண் திருப்தியாகிறதில்லை.**

வாலிப சகோதர சகோதரிகளே! உங்கள் நாட்களில் நீங்கள் எத்தனையோ மனிதர்களை, எத்தனையோ காட்சிகளைக் காண்கின்றீர்கள். ஆனால் எதுவும் உங்களை இதுவரை திருப்தி செய்யவில்லை என்பதே உண்மையாகும்.

சிம்சோன் தனது பார்வைக்கு எது ஏற்றதோ அதனை அனுபவிக்கும் பிடிவாதக்குணமுடையவராக இருந்தார். முதலாவது ஒரு பெண்ணைப் பார்த்து அவளையே திருமணம் செய்ய வேண்டும் என்று ஒற்றைக் காலில் நின்றார். தாய் தகப்பன் எவ்வளவோ சொல்லிப் பார்த்தும் அவர் கேட்கவில்லை. பின்பும் கூட பட்டும் தெளியவில்லை என்பது போன்று நடந்து கொண்டார். பின்பு ஓர் நடத்தை கெட்ட பெண்ணைப் பார்த்தார். அவளோடு ஐக்கியமாகவே மாறிவிட்டார்.

பிரியமுள்ள வாலிபப் பிள்ளைகளே, திருமண வாழ்க்கை என்பது ஏதோ ஒரு நாள் வாழ்க்கை அல்ல. அத்தோடு உடைகளை மாற்றுவது போல் நாளுக்கு நாள் மாற்றுகின்ற வாழ்க்கையும் அல்ல; மாறாக அது கர்த்தரால் ஆசீர்வதிக்கப்பட்டு பெற்றோர்களின் மகிழ்ச்சியின் மூலம் அங்கீகரிக்கப்படும் பொழுதே நிறைவான மகிழ்வைக் கொண்டுவரும்.

**நீதிமொழிகள் 27:20 பாதாளமும் அழிவும் திருப்தியாகிறதில்லை; அதுபோல மனுஷனுடைய கண்களும் திருப்தியாகிறதில்லை.**

**பிரசங்கி 11:9 வாலிபனே! உன் இளமையிலே சந்தோஷப்படு. உன் வாலிப நாட்களிலே உன் இருதயம் உன்னைப் பூரிப்பாக்கட்டும்; உன் நெஞ்சின் வழிகளிலும், உன் கண்ணின் காட்சிகளிலும் நட; ஆனாலும் இவையெல்லாவற்றினிமித்தமும் தேவன் உன்னை நியாயத்திலே கொண்டுவந்து நிறுத்துவார் என்று அறி.**

வாலிபப்பிள்ளைகளே, உங்கள் விருப்பப்படி வாழவேண்டும் என்ற மமதையை விட்டுவிடுங்கள். ஏனெனில் நீங்கள் செய்கின்ற எல்லாவற்றிற்கும் இறுதியில் நியாயத்தீர்ப்பு ஒன்று உள்ளது என்பதை மறக்கவேண்டாம்.

வாலிபப்பிராயத்தில் மகிழ்ச்சியாக இருக்கத்தான் வேண்டும். ஆனால் அன்புள்ள தேவன் நியாயம் தீர்க்கும் அளவிற்கு எமது செயல்கள் காணப்படக்கூடாது. வாலிப வயதில் உங்கள் இருதயங்களுக்குள் தேவையில்லாத சஞ்சலங்களை வைத்திருக்க வேண்டாம். வாலிபத் திமிருக்கு இடங்கொடுத்து உங்கள் உடலினால் பாவம் செய்யவேண்டாம். ஏனெனில் உங்களது இளவயது சொற்ப காலமே இருக்கும். அது உங்களுக்கு நன்றாகத் தெரியும் என நினைக்கிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே சிம்சோன் எனும் பலசாலி திரும்பத் திரும்ப பெண் ஆசை என்ற வலையில் வீழ்வதற்கு காரணம் முதலாவது அவரது பிரயாணங்கள், அடுத்து அவரது பார்வை. எச்சரிக்கையாக இருந்து எம்மைக் காத்துக் கொள்வோம்.

சிம்சோன் தன் வாழ்க்கையில் விட்ட நான்காவது தவறினைக் குறித்து சிந்திப்போம் வாருங்கள்.

## 04. பொருத்தனையைக் காத்துக் கொள்ள தவறினார்

சிம்சோனைக் குறித்த தேவ திட்டம் என்ன? அவர் பிறப்பதற்கு முன்பதாகவே தேவன் அவரைக் குறித்து அவர் பெற்றோருக்கு எதனைச் சொன்னார்? பார்ப்போம் வாருங்கள்.

**நியாயாதிபதிகள் 13:5 நீ கர்ப்பந்தரித்து, ஒரு குமாரனைப் பெறுவாய்; அவன் தலையின்மேல் சவரகன் கத்தி படலாகாது; அந்தப் பிள்ளை பிறந்ததுமுதல் தேவனுக்கென்று நசரேயனாயிருப்பான்; அவன் இஸ்ரவேலைப் பெலிஸ்தரின் கைக்கு நீங்கலாக்கி ரட்சிக்கத் தொடங்குவான் என்றார்.**

நியாயாதிபதிகள் வரலாற்றில் சிம்சோன் பதினான்காவது நியாயாதிபதியாக காணப்படுகிறார். சிம்சோனைப் பெற்றோர் எவ்வாறு வளர்க்க வேண்டும் என்றும்; அவனது வாழ்க்கை முறை என்னவென்றும் தேவன் அவரது பெற்றோர்களுக்கு முன்னறிவித்திருந்தார்.

அதாவது சிம்சோன் தன் தலைமுடியைச் சவரக்கத்தியால் நீக்கக்கூடாது. திராட்சை ரசம், மதுபானம் அருந்தக்கூடாது என்பனவற்றை தனது வாழ்நாள் முழுவதும் கடைப்பிடிக்க வேண்டும் என்பது அவருக்கு தேவனால் நியமிக்கப்பட்ட ஒன்றாகும். இப் பொருத்தனைகளை சிம்சோன் கடைசிவரைக்கும் காத்துக் கொள்ள முயற்சி எடுத்தார் என்பதும் ஒரு வகையில் உண்மை தான். ஏனெனில்,

**நியாயாதிபதிகள் 16:6 உன் மகா பலம் எதினாலே உண்டாயிருக்கிறது, உன்னைச் சிறுமைப்படுத்த உன்னை எதினாலே கட்டலாம் என்று நீ எனக்குச் சொல்லவேண்டும்**

எனும் பொழுதெல்லாம் சிம்சோன் வேறு பதில்களைச் சொல்லி தன் இரகசியத்தை வெளிப்படுத்தாமல் காத்து நடந்து வந்தார்.

பரிதாபம் என்னவெனில் தொடர்ந்து அவரால் தனது பொருத்தனைகளை நிறைவேற்ற முடியவில்லை. ஒரு கட்டத்தில் அவர் தன் பொருத்தனைகளை குழப்பக்கூடிய சக்திகளிடம் தன்னை ஒப்புக்கொடுக்கும் பரிதாப நிலையைக் காண்கிறோம்.

**நியாயாதிபதிகள் 16:17 தன் இருதயத்தையெல்லாம் அவளுக்கு வெளிப்படுத்தி: சவரகன் கத்தி என் தலையின்மேல் படவில்லை; நான் என் தாயின்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கர்ப்பத்தில் பிறந்ததுமுதல் தேவனுக்கென்று நசரேயனானவன்; என் தலை சிரைக்கப்பட்டால், என் பலம் என்னைவிட்டுப்போம்; அதினாலே நான் பலட்சயமாகி, மற்ற எல்லா மனுஷரைப்போலும் ஆவேன் என்று அவளிடத்தில் சொன்னான்.**

எப்பொழுது தன் இருதயத்தையெல்லாம் அப் பெண்ணிற்கு வெளிப்படுத்தினாரோ அப்பொழுதே இதுவரை காத்துவந்த பொருத்தனைகளை முறிக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டார்.

பொருத்தனை எப்பொழுது அவர் வாழ்வில் முறிந்து போனதோ அப்பொழுதே அவர் மேல் இருந்த கர்த்தருடைய தொடர்பும் நீங்கிப்போனது.

பிரியமுள்ள வாலிப சகோதர சகோதரிகளே, கொஞ்சம் பொறுமையாக நிதானித்து சிந்திப் பாருங்கள். உங்களுக்கும் தேவனுக்கும் இருக்கும் ஐக்கியத்தை உடைக்கும்படி உங்கள் இருதயத்தையெல்லாம் வாரிக்கொள்வதற்கு சாத்தான் கங்கணம் கட்டிக்கொண்டிருக்கிறான்.

அதனால் தான் தேவன் கேட்கிறார்,

**நீதிமொழிகள் 23:26 என் மகனே, உன் இருதயத்தை எனக்குத் தா; உன் கண்கள் என் வழிகளை நோக்குவதாக.**

உங்கள் இருதயத்தை ஆண்டவருக்கு தெரியப்படுத்துங்கள். உங்கள் உள்ளான வாஞ்சைகளையும், ஏக்கங்களையும் தேவனுக்கு தெரியப்படுத்துங்கள். உங்கள் கடந்த காலங்கள், எதிர்காலங்கள் யாவையும் தேவனுக்கு தெரியப்படுத்துங்கள்.

சிம்சோனின் இருதயத்தை கிளறி அவரை அவரது பொருத்தனையில் இருந்து விலகச் செய்த பெண்ணைப் போல இன்றும் உங்கள் இருதயங்களை அன்பு எனும் கபட வேஷம் கொண்டு அபகரித்து உங்கள் பிரதிஷ்டைகளில் இருந்து உங்களை விழப்பண்ணும்படி சாத்தான் பல வழிகளைக் கையாளுவான்.

பிள்ளைகளே நீங்கள் சாதாரணமானவர்கள் அல்ல. உங்கள் தெய்வம் உண்மையானவராக இருக்கிறார். அவர் உங்களை இன்னும் நேசிக்கிறார், விசாரிக்கிறார். உலகத்தின் பக்கம் உங்கள் முகங்களை திருப்பாமல் உன்னதமான தேவனுக்கு முன்பதாக உங்கள் பொருத்தனைகளைச் செலுத்துங்கள்.

சிம்சோன் தன் பொருத்தனைகளைக் காத்துக் கொள்ளத் தவறியது போல் நீங்கள் தவறவேண்டாம். உங்களுக்கான சிறப்பான எதிர்காலம் உங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவிடம் உண்டு என்பதை மறக்க வேண்டாம்.

**11கொரிந்தியர் 6:17-18 (17.) ஆனபடியால், நீங்கள் அவர்கள் நடுவிலிருந்து புறப்பட்டுப் பிரிந்துபோய், அசுத்தமானதைத் தொடாதிருங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார். 18. அப்பொழுது, நான் உங்களை ஏற்றுக்கொண்டு, உங்களுக்குப் பிதாவாயிருப்பேன், நீங்கள் எனக்குக் குமாரரும் குமாரத்திகளுமாயிருப்பீர்களென்று சர்வவல்லமையுள்ள கர்த்தர் சொல்லுகிறார்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமாதானம் அற்றநிலை என்னும் இக்கட்டு!



திருமதி. J.பிலிப்




அன்பான சகோதரிகளே, இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள். அனலின் பெண்கள் பக்கத்தில் தொடர்ந்து நாம் 'இக்கட்டுக் கள்' குறித்து பார்த்துக் கொண்டு வருகின்றோம். வியாதி, கடன்தொல்லை, குடும்ப பிரச்சினை என்பவற்றைக் குறித்து பார்த்தோம். இம்முறை 'சமாதானம் அற்றநிலை' என்னும் இக்கட்டுக் குறித்து நாம் பார்க்கலாம்.

இயேசு கிறிஸ்துவை நம் வாழ்வின் சொந்த இரட்சகராக நாம் ஏற்றுக் கொள்ளும் போது எமக்குள்ளாக தேவசமாதானம் உண்டா கிறது. சமாதானம் அற்ற நிலை என்னும் இக்கட்டுக்குள் நீ இருப்பாயாக இருந்தால் இன்றைக்கு நீ உன்னுடைய வாழ்க்கையை ஆராய்ந்து பார்க்க வேண்டும். இயேசு உன் வாழ்க்கைக்குள் இல்லாவிட்டால் நிச்சயம் நீ சமாதானமாய் இருக்க முடியாது. மாறாக சமாதானம் அற்ற நிலை ஏற்படும்.

உனக்குள் சமாதானம் அற்ற நிலை ஏற்படக்காரணம்:

1. உன் வாழ்க்கையின் எல்லாப் பகுதிகளும் முழுமையாக தேவனுக்கு ஒப்படைக்காமல் இருத்தல்.

2. தேவனையும் தேவ வார்த்தையையும் விசுவாசிக்காமல் இருத்தல்.

3. தேவனை தேடவேண்டிய விதமாய் தேடாமல் இருத்தல்.

4. தேவ திட்டத்திற்கு மாறாக செயற்படல்.

5. தேவனை அறியாதவர் களுடன் அதிக ஐக்கியம் வைத்திருத்தல்; அவர்களுடன் அதிக நேரம் செலவிட்டு அவர்களின் ஆலோசனைப்படி நடத்தல்.

6. மற்றவர்களுடன் ஒப்பிட்டு வாழ்க்கையை நடத்துதல்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. தேவன் உனக்கு கொடுத்திருக்கும் சபைக்கு உண்மையற்ற நிலையில் இருத்தல்.

8. தேவனுக்கு முன்பாக செய்த பொருத்தனை களை நிறைவேற்றாமல் போகுதல்.

9. காணிக்கை, தசமபாகத்தில் உண்மையற்ற நிலை; தகுதியற்ற நிலையில் திருவிருந்து பந்தியில் கலந்து கொள்ளுதல்.

10. தன் இஷ்டப்படி எல்லாக் காரியங்களையும் செய்து முடித்தல்.

சகோதரிகளே சமாதானம் அற்றநிலை ஏற்பட சில காரணங்களை மேலே பார்த்தோம். உனக்குள் சமாதானம் அற்றநிலை ஏற்படும் என்றால் உன் தேவன் உனக்கு சமாதானத்தை தர ஆயத்தமாயிருக்கிறார்.

**லூக்கா 8:48 அவர் அவளைப் பார்த்து: மகளே, திடன்கொள், உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது. சமாதானத்தோடே போ என்றார்.**

இயேசு ஒரு ஸ்திரீயைப் பார்த்து; 'சமாதானத்தோடே போ!' என்றார். யார் அந்த ஸ்திரீ? வியாதி என்னும் இக்கட்டுக்குள் இருந்தவள். அவளின் வியாதியின் நிமித்தம் பணம் எல்லாவற்றையும் செலவழித்துவிட்டாள். இப்போது கடன் தொல்லை என்னும் இக்கட்டுக் குள் அகப்படவேண்டிய நிலை, வியாதியின் நிமித்தம் குடும்பங்களுக்குள் அதிக இக்கட்டுக் களுடன் இருந்திருக்கலாம். சமாதானம் அற்ற நிலையும் ஏற்பட்டிருக்கலாம்.

இந்த சூழ்நிலையில் இயேசுவைக் குறித்து கேள்விப்படுகிறாள்.

**மாற்கு 5:27-34 (27.) இயேசுவைக் குறித்துக் கேள்விப்பட்டு: நான் அவருடைய வஸ்திரங்களையாகிலும் தொட்டால் சொஸ்தமா வேன் என்று சொல்லி; 28. ஜனக்கூட்டத்துக் குள்ளே அவருக்குப் பின்னாக வந்து, அவருடைய வஸ்திரத்தைத் தொட்டாள். 29. உடனே அவளுடைய உதிரத்தின் ஊறல் நின்றுபோயிற்று; அந்த வேதனை நீங்கி ஆரோக்கியம டைந்ததை அவள் தன் சரீரத்தில் உணர்ந்தாள். 30. உடனே இயேசு தம்மிலிருந்து வல்லமை புறப்பட்டதைத் தமக்குள் அறிந்து, ஜனக்கூட்டத்துக்குள்ளே திரும்பி: என் வஸ்திரங்களைத் தொட்டது யார் என்று கேட்டார். 31. அவருடைய சீஷர்கள் அவரை நோக்கி: திரளான ஜனங்கள் உம்மை நெருக்கிக் கொண்டிருக்கிறதை நீர் கண்டும், என்னைத் தொட்டது யார் என்று கேட்கிறீரே என்றார்கள். 32. இதைச் செய்தவளைக் காணும் படிக்கு அவர் சுற்றிலும் பார்த்தார். 33. தன்னிடத்திலே சம்பவித்ததை அறிந்த அந்த ஸ்திரீயானவள் பயந்து, நடுங்கி, அவர் முன்பாக வந்து விழுந்து, உண்மையை யெல்லாம்அவருக்குச்சொன்னாள். 34. அவர் அவளைப் பார்த்து: மகளே, உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது, நீ சமாதானத் தோடேபோய், உன் வேதனை நீங்கி, சுகமாயிரு என்றார்.**

கேள்விப்பட்டவுடன் ஒரு தீர்மானம் எடுத்தாள். இயேசுவைப் பார்த்து அவரின் வஸ்திரத்தின் ஓரத்தை தொட வேண்டும். ஜனக்கூட்டம் அதிகம் ஆனால் எடுத்த தீர்மானத்தை செயற்படுத்தவேண்டும் என்பதற்காய் இயேசுவுக்கு பின்னால் சென்றாள், அவரின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வஸ்திரத்தை தொட்டாள்; தொட்டவுடனே எல்லா இக்கட்டிலிருந்தும் விடுதலை பெற்றாள். ஜனக்கூட்டத்தைப் பார்த்து அவள் பயப்படவில்லை. இயேசுவுக்கு பின்பாக செல்கின்றாள். ஏன் இயேசுவுக்கு பின் சென்றாள்? அவருடைய அடிச்சுவடுகளை பின்பற்றி நடப்பதற்காய், இன்று அனேக சகோதரிகள் தங்களுடைய சொந்த தீர்மானங்களை எடுத்து அந்த தீர்மானங்களை இயேசு நிறைவேற்ற வேண்டும் என்று இயேசுவுக்கு முன்பாக நடக்கப்பார்க்கிறார்கள். இயேசுவுக்கு முன்பாக நடப்பவர்கள் கொஞ்ச தூரம் நடப்பார்கள். பின்பு அவர்களுக்கு சமாதானம் அற்ற நிலை நிச்சயம் ஏற்படும். அதுமட்டுமல்ல இயேசுவிடம் இருந்து பின்வாங்கிபோய்விடுவார்கள்.

அவள் எடுத்த தீர்மானம் என்ன? 'இயேசுவின் வஸ்திரத்தை தொடவேண்டும்' அதை அவள் நிறைவேற்றினாள். கிடைத்தது என்ன?

**லூக்கா 8:48 அவர் அவளைப் பார்த்து: மகளே, திடன்கொள், உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது, சமாதானத்தோடே போ என்றார்.**

இயேசுவின் பார்வை, இரட்சிப்பு, வேதனை நீங்கியது, சுகம் கிடைத்தது. 'சமாதானத்துடன் போ' என்ற வார்த்தைகள் இயேசுவின் வாயிலிருந்து புறப்பட்டது. சமாதானம் அற்ற நிலை என்னும் இக்கட்டு நீங்கி தேவசமாதானம்பெற்றாள்.

சகோதரியே இந்த ஸ்திரீயைப் போல நீயும் தீர்மானம் எடுத்து அவருடைய அடிச்சுவடுகளை பின்பற்றி, அவருடைய வார்த்தையின்படி வாழ்ந்தால் உனக்கும் பூரண சமாதானம்கிடைக்கும். அப்போது சமாதானம் அற்ற நிலை என்னும் இக்கட்டில் இருந்து உனக்கும் விடுதலையை உன் தேவன் கொடுப்பார்.

**சங்கீதம் 66:14 என் இக்கட்டில் நான் என் உதடுகளைத் திறந்து, என் வாயினால் சொல்லிய என் பொருத்தனைகளை உமக்குச் செலுத்துவேன்.**



## இந்த நொடியை அவிழுங்கள் பார்க்கலாம்!

ஒவ்வொரு 'வெள்ளாடு ரூபா 200.00, வெள்ளாட்டுக்கடா ரூபா 250.00, செம்மறியாடு ரூபா 150.00, ஆட்டுக்கடா ரூபா 200.00, ஒட்டகம் ரூபா 1000.00, ஒட்டகக்குட்டி ரூபா 300.00, கடாரி ரூபா 300.00, காளை ரூபா 1000.00, கழுதை ரூபா 200.00, கழுதைக்குட்டி ரூபா 50.00' இந்த கணக்கின்படி ஏசாவுக்கு யாக்கோபு வெகுமதியாகக் கொடுத்த மிருக ஜீவன்களின் விலைக்கிரயம் என்ன? மிருக ஜீவன்கள் எத்தனை?

*இதற்கான விடையையும் எழுதி அனுப்பி பாராட்டைப் பெற்றுக் கொள்ளுங்கள்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மலரின் அதிசயம்

❑ ஜசிந்தா அக்கா




நிலக்கரி சுரங்கம் அமைந்திருந்த நகருக்கு ஊழியம் செய்யும்படியாக போதகர் ஒருவர் வந்திருந்தார். அங்குள்ள சுரங்கத்தைப் பார்க்க வேண்டும் என்று விரும்பி அதற்கான அனுமதியைப் பெற்றுக் கொண்டு உள்ளே சென்றார். சென்றவருக்கு சற்று தயக்கமாகவும் இருந்தது. காரணம் எங்கு பார்த்தாலும் கருமையான தூசி. சுரங்கத்திற்குள் வேலை செய்து திரும்பிக் கொண்டிருந்தவர்கள் சரீரமெல்லாம் மிகவும் அழுக்கடைந்து கருமையான நிறத்தில் காணப்பட்டார்கள்.

ஆனாலும் ஆச்சரியத்தோடு எல்லாவற்றையும் சுற்றிப்பார்த்துக் கொண்டிருந்தவர் ஒரு இடத்தில் வந்ததும் ஒரு நிமிடம் வியப்போடு நின்று நன்றாக உற்றுக் கவனித்தார். அந்த இடத்தில் வெள்ளை வெளேரென்று அழகிய மலர் ஒன்று இருப்பதைக் கண்டு வியந்துபோனார். இந்த அழுக்கான இடத்தில் இவ்வளவு தூய்மையான மலரா? இது எப்படி என்று தொழிலாளி ஒருவரிடம் கேட்டார்.

தொழிலாளி கொஞ்சம் கரித்தூளை எடுத்து பூவின் மேல் தூவினார். கரித்தூள் மலரின் இதழில்பட்ட வேகத்தில் வழுக்கிக் கீழே விழுந்ததையும் அந்த மலர் முன்பு போல அழகு மாறாமல் மிளிர்வதையும் கண்டு மிகவும் ஆச்சரியப்பட்டார். காரணம் அம் மலரின் இதழ்கள் வழுவழுப்பாய் இருந்ததினால் கரித்தூள் இதழ்களில் தங்கமுடியாமல் விழுந்துவிட்டது. இதனால் மலரும் வெண்மை நிறம் மாறாமல் பிரகாசித்துக் கொண்டிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயேசுவின் அன்பான செல்லப்பிள்ளைகளே கதையைக் கவனமாக வாசித்தீர்களா? 'நான் பாவம் செய்யாமல் வாழவேண்டும்' என்று தீர்மானம் எடுக்கிற ஒவ்வொருவருக்கும் இயேசப்பா உதவி செய்வார். மலரின் இதழ்களிலிருந்த வழுவழுப்பான தன்மையை நினைத்துக் கொள்ளுங்கள்.

**1பேதுரு 1:16 நான் பரிசுத்தர், ஆகையால் நீங்களும் பரிசுத்தராயிருங்கள் என்று எழுதியிருக்கிறதே.**

---

# குறுக்கெழுத்துப் போட்டி - 108, வினா விடை - 110

## சரியான விடை எழுதியவர்கள்

**யாழ்ப்பாணம்**
01. ச.டேவிட்

**காரைநகர்**
02. அ.எஸ்தர்
03. உ.சாத்ராக்
04. அ.கிருசாந்தன்
05. அ.தெபோரா
06. ர.தர்சிகா
07. ர.றனித்தா
08. வி.ரெபெக்காள்
09. நா.அன்னாள்
10. நா.கிறிஸ்தீனா
11. பா.அனுகரன்
12. க.தனு
13. பா.அனுசியா

**வடகாடு**
14. ச.பிளஸ்ஜா *
15. ச.எஸ்தர் *
16. ச.அபிஷா *
17. ச.எப்சிபா *
18. பா.மாலா

**வேரவில்**
19. மாகிறேட்
20. இ.ஞானசேகர்
21. ஞா. மதிநிலா
22. எ.சுதர்சினி

**பாண்டவெட்டை**
23. மு.ஜெசிந்தா
24. சி.சிவனேஸ்வரன்

**தர்மபுரம்**
25. நி.றெசினா
26. உ.தமிழ்ப்பிரதி +
27. சி.வளவன்
28. உ.ஜெருஷா ஜெனிபர்
29. நி.அருட்செல்வி
30. வ.வானுசன் +
31. அன்பன் +
32. ஜே.தர்சன்
33. பி.புகழ்நிலா *
34. ஜா.ஜோன்வெஸ்லி
35. உ.கிறேஸ்அனா
36. பி.கலைச்சுடர்
37. ஜா.ஜொலிஸ்ரா வில்மா +

**ஊர்காவற்றுறை**
38. லோ.நெகேமியா *

**நாவற்குழி**
39. எஸ்.லக்சாயினி

**கிளிநொச்சி**
40. யோ.ஜென்சன்
41. யோ.தர்சன்
42. ம.சப்திகன்
43. ச.ஜோன்ஷிகா

**திருநெல்வேலி**
44. ந.செல்வன் +

* வினாவிடை மட்டும் சரியாய் எழுதியோர்
\+ குறுக்கெழுத்துப்போட்டி மட்டும் சரியாய் எழுதியோர்
இரண்டும் சரியாய் எழுதியோர்



**சரியான விடை எழுதியவர்களில் பாராட்டுக்குரியவர்களாக தெரிவு செய்யப்பட்டிருப்பவர்கள்:**

**வினாவிடை - 110**
**ச.டேவிட்**
**(யாழ்ப்பாணம்)**



**குறுக்கெழுத்துப் போட்டி - 108**
**யோ.ஜென்சன்**
**(கிளிநொச்சி)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# அருட்பணியாளர் சரிதை



## பெப்ரீஷியஸ்
## 1711 - 1791

### உபத்திரவங்கள் உறுதியின் சின்னங்கள்

வாழ்க்கையில் வரும் வேதனைகளும் சோதனைகளும் நம்மை உறுதி உள்ளவர்களாக மாறச் செய்கின்றன. சோதனைகளைக் கண்டு துவண்டு போகின்றவர்கள் எதனையும் சாதிக்க முடியாது.

40 வருடங்கள், தன் வாழ்வின் பாதி காலத்தை மொழிப்பெயர்ப்புப் பணிக்காகவே செலவு செய்து வெற்றியின் கனியாகிய வேதாகமத்தைப் புது வடிவத்தில் தந்தவரே பெப்ரீஷியஸ்.

முறைப்படி வேத சாஸ்திரம் கற்றவர். சுவிசேஷ லுத்தரன் சபையின் குரு. இந்திய திருநாட்டில் இறை மக்களை உருவாக்க இதயத்தில் வாஞ்சை கொண்ட இவர் 1740ஆம் ஆண்டு இந்தியா வந்தார். மிஷனெரி சுல்ட்ஸ்சே அவர்களின் பணியை பொறுப்புடன் ஏற்று சிறப்புடன் செய்தார்.

இவர் நேரத்தை வீணாக்காதவர். சிக்கன வாழ்க்கை நடத்தியவர். எபிரேய மொழியிலும் தமிழ் மொழியிலும் புலமை பெற்றவர்.

பல இடையூறுகளின் மத்தியில் 1772ஆம் ஆண்டு ஒத்த வாக்கிய குறிப்புகளுடன் தமிழ் வேதாகமத்தை வெளியிட்டார். இவர் மொழி பெயர்த்து வெளியிட்ட ஞானப்பாடல்கள் இன்றும் திருச்சபைகளில் பாடப்படுகின்றன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல இன்னல்கள், போர் அபாயங்கள், உள்நாட்டு பிரச்சினைகள், பொருளாதார குறைபாடுகள், ஏமாற்றங்கள் வந்த போதும் தம் அழைப்பில் உறுதியுடன் பணியாற்றினார்.

சிறுவர்களுக்கான இல்லம் அமைத்ததோடு பலருக்கு வீடுகள் கட்ட உதவி செய்தார். தன்னலம் சற்றும் கருதாமல் பிறர் நலத்திலே கருத்தாய் காணப்பட்டார். இவரின் எளிய வாழ்வு முறையால் 'சந்நியாசகுரு' என எல்லோராலும் அழைக்கப்பட்டார்.

வசதிவாய்ப்பற்ற அந் நாட்களிலே பெரும்பணிகளை ஆற்றிய இத் திருமகன் 1791ஆம் ஆண்டு ஜனவரி 22இல் இப்புவியினில் ஓய்வு பெற்றார்.


**அன்பரே! உபத்திரவங்கள் வரும்போது, கிறிஸ்துவின் மேல் உள்ள பற்று எப்படி உள்ளது?**

வாழ்விலிருந்து வாழ்வுக்கு: தன் ஆத்துமத்தை சிநேகிக்கிறவனெல்லாம், இந்த சுவிசேஷத்திற்கு செவிகொடுப்பானாக. — பெப்ரீஷியஸ்

**நன்றி: "மனிதர்களைத் தேடிய மாமனிதர்கள்" ஜனவரி 22**

---

# மாற்கு டேனியல் பண்டேன்
# 1923 - 1989



## சேவை செய்வதில் மகிழ்ச்சி

1923ஆம் ஆண்டு, ஜனவரி மாதம் 26ஆம் திகதி, கனடா நாட்டில் ஒரு பிரசங்கியாரின் தவப்புதல்வனாக போதகர் மாற்கு டேனியல் பண்டேன் பிறந்தார்.

சிறுவயதிலேயே மிஷனெரிகளைக் குறித்த தான அநேக புத்தகங்களை விரும்பிப் படிப்பார். தானும் இவர்களைப் போன்ற சிறந்த ஓர் மிஷனெரியாக மாற வேண்டும் என்று எண்ணினார். ஆயினும், கடவுளின் அழைப்பிற்காகக் காத்திருந்தார்.

1942ஆம் ஆண்டு, வானொலி நிலையத்திலிருந்து தன்னுடைய பணியை முடித்துவிட்டு களைப்புடன் வீட்டிற்கு வந்தார். படுக்கையில் சாய்ந்த சில மணித்துளிகளில் ஆண்டவர் தன்னோடு பேசுவதை உணர்ந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகப்பிரகாரமான வேலையை தள்ளிவிட்டு தன்னை ஊழியத்திற்கு அர்ப்பணித்தார்.

1954ஆம் ஆண்டு தனது மனைவி ஹில்டாவுடன் இந்தியாவிலுள்ள கல்கத்தா வந்தார். 'மிஷன் ஆப் மெர்சி' என்ற நிறுவனத்தை தோற்றுவித்து அனேக மக்களின் வாழ்க்கையை பிரகாசமடையச் செய்தார்.

1964ஆம் ஆண்டு 'அசெம்பிளீஸ் ஆப் காட்' என்ற பள்ளிக்கூடத்தை கல்கத்தாவில் நிறுவினார். மேலும் தொழிற்கல்விக் கூடத்தையும், ஆசிரியர் பயிற்சிப் பள்ளியையும் ஆரம்பித்தார். 1965இல் மாணவர்களுக்கு உணவு அளிக்கும் திட்டத்தைத் தொடங்கினார். தற்போது 200000இற்கும் மேற்பட்டோர் இத் திட்டத்தால் பயன் பெற்று வருகின்றனர்.

இவருடைய சேவையைப் பாராட்டி 1969ஆம் வருடம் அமெரிக்காவின் பெத்தானி வேதாகமக் கல்லூரியும், 1984இல் கொலம்பியா மிசோரி பல்கலைக்கழகமும் இவருக்கு பண்டிதர் பட்டம் வழங்கிச் சிறப்பித்தன.

கடவுளுக்காய் பெரிய காரியங்களைச் செய்தும், மற்றவர்களை இப் பணியில் உற்சாகப்படுத்திய சிறந்த மிஷனெரி மாற்கு டேனியல் பண்டேன் 1989ஆம் ஆண்டு ஜுன் மாதம் 03ஆம் திகதி இறைவன் பாதம் சரணடைந்தார்.

**வாழ்விலிருந்து வாழ்வுக்கு:** இயேசுவுக்கான முழுமையாய் அர்ப்பணிக்கப்பட்ட எந்த வாழ்வும் ஒரு போதும் வீணாய் போவதில்லை. — தியோடர் வில்லியம்ஸ

**நன்றி: "மனிதர்களைத் தேடிய மாமனிதர்கள்" ஜனவரி 26**

# வினாவிடை 110

## சரியான பதில்கள்



01. கைகளை அவரிடத்திற்கு ஏறெடுக்க வேண்டும் (ஜெபம் செய்ய வேண்டும்) - புலம்பல் 2:19
02. தாவீது - சங்கீதம் 9:1
03. தானியேல் 9:19
04. ஏசாயா 52:6
05. சங்கீதம் 71:17
06. லேவியன் - உபாகமம் 18:7
07. ஏசாயா 25:1
08. திரியாவரக்காரரின் - யோபு 5:13
09. ஞானமுள்ளவன் - மீகா 6:9
10. கன்மலையின்மேல் - நியாயாதிபதிகள் 13:19



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




❏ போதகர் வேதநாயகம் மகாராஜா




**நா**ங்கள் எல்லோரும் இரட்சிக்கப்படும்படி பிதாவாகிய தேவன் தன்னுடைய ஒரே பேறான குமாரனாகிய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை இந்தப் பூமிக்கு அனுப்பினார். இயேசுவை யாரெல்லாம் விசுவாசிக்கிறார்களோ அவர்களுடைய வாழ்வில் இரட்சிப்பைக் கொடுக்கின்றார். இரட்சிப்பு என்றால்; "பாவத்தில் இருந்தும், மாம்சத்தின் வல்லமையில் இருந்தும்; பிசாசின் வல்லமையில் இருந்தும், வியாதியில் இருந்தும், இல்லாமையில் இருந்தும் இயேசு கிறிஸ்து மூலம் வருகிற விடுதலை" அதுதான் இரட்சிப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரட்சிப்பு மூன்று காலங்களையும் உள்ளடக்கியது.

1. இரட்சிக்கப்பட்டோம்

2. இரட்சிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறோம்

3. இரட்சிக்கப்படுவோம்

இரட்சிக்கப்பட்டோம் என்பது மனந்திரும்பி கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசித்து பாவங்களை அறிக்கை செய்யும் போது இயேசு கிறிஸ்து தம் இரத்தத்தாலே எம் பாவங்களைக் கழுவி பரிசுத்தமாக்கிடும் நிலை. அதன் போது முதலாவது இரட்சிக்கப்பட்டோம்.

இப்போது இரட்சிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறோம். பெற்றுக் கொண்ட பாவமன்னிப்பைக் காத்துக் கொண்டு தூய்மையாக வாழுவது பெலவீனங்கள், இல்லாமைகள் ஏற்படும் போது கர்த்தரையும் அவருடைய வல்லமையையும் நம்பி ஜெயம் எடுப்பது மாம்ச இச்சைகளை வெறுத்து ஆவிக்குரிய ரீதியில் பெலன் கொண்டு வாழ்ந்து கொண்டிருப்பது. நித்திய மரணத்தில் இருந்து நம்மை மீட்டு நித்திய ஜீவனை இயேசு தந்துவிட்டார் என்ற விசுவாசத்துடன் வாழ்வது. கல்வாரியில் இயேசு கிறிஸ்து பெற்றுத்தந்த ஜெயத்தை எமக்குச் சொந்தமாக்கி, பரலோகத்தை நோக்கிச் சென்று கொண்டிருப்பது. இது இப்போது விசுவாசிகளாய் நாம் வாழும் வாழ்க்கை அதாவது 'இரட்சிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறோம்'.

மூன்றாவது இரட்சிக்கப்படுவோம். இது தான் இரட்சிப்பில் நிறைவானது. இது நிரந்தரமாக பரலோகத்தில் தேவனுடன் வாழும் நிலை. இங்கே செல்வது தான் பூரணமாக இரட்சிக்கப்பட்டோம் என்பது. நித்தியமாக நித்திய ஜீவனைப் பெற்றுக் கொள்வது. இவர்களுக்கு இனி மரணம் ஏற்படுவதில்லை. அங்கே பாவம் இல்லை.

எனவே இரட்சிப்பு என்றால் 'பாவம், பிசாசு, மரணம், வியாதி, மாம்ச இச்சை, இல்லாமை என்பனவற்றிலிருந்து பெற்றுக் கொள்ளும் விடுதலையாகும்'.

விசுவாசிகள் சிலருக்கு வியாதி ஏற்படும் அதன் காரணம் அவர்கள் இரட்சிக்கப்படாமையினால் தான் ஏற்பட்டது என்று கருதமுடியாது, அல்லது ஏதோ ஒரு பாவம் அவரில் இருக்கின்றமையால்தான் வியாதி வருகின்றது என்றும் சொல்ல முடியாது. ஆனால் உண்மையில் வியாதிக்குரிய பெரும்பாலான பகுதி பாவம் தான். இருந்தாலும் வியாதிக்கு வேறு காரணங்களும் உண்டு. அது எமது அறியாமை, கவலையீனம், என்பவை களாலும் ஏற்படலாம். **அதனைவிட சிலருக்கு வியாதியினை தேவன் அனுமதிக்கின்றார்.** இதற்கு யோபு நல்ல உதாரணம். யோபுவிற்கு தேவன் அனுமதித்தார். ஆகவே வியாதி வந்தால் இரட்சிக்கப்படவில்லை என்று நினைக்க முடியாது; அது தவறு. **பாவம் தான் வியாதிக்குரிய காரணம்என்று நீங்கள் கண்டு கொண்டால் அதில் இருந்து வெளிவர வேண்டும். ஆனால் உண்மையான இரட்சிப்பு எல்லாவற்றில் இருந்தும் விடுதலை.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேதாகமம் மூன்று வகையான ஞானஸ்நானத்தைக் காண்பிக்கிறது.

1. முழுக்கு ஞானஸ்நானம் (தண்ணீர்) - மத்தேயு 3:13, மத்தேயு 28:19

2. பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் - மத்தேயு 3:11, லூக்கா 3:16

3. பாடுகளின் ஞானஸ்நானம் - லூக்கா 12:50

இங்கே முழுக்கு ஞானஸ் நானம் குறித்து நாம் பார்ப்போம்.

தண்ணீர் ஞானஸ்நானம் எதற்கு அடையாளமெனில் நாம் கிறிஸ்துவுடன் கூட பாவத்திற்கு மரித்து அடக்கம் பண்ணப்பட்டு நீதிக்காய் அவருடனே கூட எழுந்திருப்பதற்கு அடையாளமானது.

எனக்கு ஒருவர் கூறினார்: அவருக்கு இன்னொருவர் கூறியதாக: தான் இதுவரைக்கும் ஏழு தடவை தண்ணீர் ஞானஸ்நானம் பெற்றிருக் கின்றேன் என்று. அது ஒரு பிழையான காரியம். **'நாங்கள் ஒரு தடவை உண்மையாக பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்தினால் தண்ணீரில் மூழ்கி ஞானஸ்நானம் பெற்றிருக்க வேண்டும்'.** இது இயேசு கிறிஸ்து எங்களுக்குத் தந்த அடிப்படை கட்டளை.

யாரும் ஞானஸ்நானத்தை அசட்டை செய்தால் அதற்குரிய தண்டனையைப் பெறவேண்டி வரும். ஏனென்றால் இயேசு கிறிஸ்து யோவான் ஸ்நானகனிடம் ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ள வந்தார். உடனே யோவான் ஸ்நானகன் சொன்னார்: **நான் உம்மிடத்தில் பெறவேண்டியிருக்க நீர் என்னிடத்திலே வரலாமா?** என்று சொல்லி இயேசுவுக்கு ஞானஸ்நானம் கொடுக்கத் தயங்கினான். ஆண்டவர் சொன்னார்: **இப்படி எல்லா நீதிகளை யும் நிறைவேற்ற வேண்டும்.** இயேசுவே ஞானஸ்நானம் எடுத்து ஒரு முன் உதாரணமாய் அதைக் காண்பித்து கீழ்ப்படிவின் செயலைச் செய்தார் (மத்தேயு 3:14-15) எம்மையும் ஞானஸ் நானம் பெறுங்கள் என்றார். இரட்சிக்கப் பட்ட ஒவ்வொரு வரும் இயேசுவின் கட்டளையை கண்டிப்பாக நிறைவேற்றி யாக வேண்டும். (மத்தேயு 28:19-20)

ஞானஸ்நானம் என்றால்: **'பாவத்துக்கு மரித்து அடக்கம் பண்ணப் பட்டு நீதிக்காய் கிறிஸ்துவுடன் கூட எழுந்திருப்பதற்கு அடையாளம்'** ஆகவே இரட்சிக்கப்பட்டவன் தான் ஞானஸ் நானம் எடுக்கலாம். சிலர் கூறுவார்கள்: ஞானஸ்நானம் எடுத்த பிற்பாடுதான் இரட்சிக்கப்படுவோம் என்பதாக. ஆனால் **இரட்சிக்கப்பட்ட பிற்பாடு தான் ஞானஸ் நானம் எடுக்க வேண்டும்.** அது தான் வேத சத்தியம். உண்மை. அது தான் தேவனுடைய வார்த்தை.

முழுக்கு ஞானஸ்நானம் பெறு வதற்கு சில தகைமைகள் அவசியமா யிருக்கின்றது: அந்த தகைமைகளைக் குறித்து ஆராய்ந்து பார்ப்போம்.

## 01. மனந்திரும்புதல்.

**அப்போஸ்தலர் 2:37-38 இதை அவர்கள் கேட்டபொழுது: இருதயத்திலே குத்தப்பட்டவர்களாகி, பேதுருவையும் மற்ற அப்போஸ்தலரையும் பார்த்து:**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சகோதரரே, நாங்கள் என்ன செய்ய வேண்டும் என்றார்கள். பேதுரு அவர்களை நோக்கி: நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவ மன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங் கள், அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள்.**

இங்கே பேதுரு கூறினார்: **இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் ஞானஸ்நானம் பெறுங்கள்.** ஆனால் இயேசு சொன்னார்: **பிதா குமாரன் பரிசுத்தாவியின் நாமத்தில் ஞானஸ் நானம் கொடுங்கள்.** ஆகவே இயேசு அப்படி சொல்லியிருக்க பேதுரு இப்படி சொல்லியிருக்கிறாரே எனலாம். ஏனென்றால் அந்த நாட்களில் இயேசுவை ஒரு அதிகாரமுடையவராய், அவருடைய தெய்வீகத் தன்மையை நிரூபிக்கத்தக்க தாய், இயேசு தேவன் என்பதனை காண்பிப்பதற்காய் அவருடைய நாமத்தின் வல்லமையை வெளிப்படுத்துவதற்காய் அந்த இயேசு என்ற நாமம் பயன்படுத் தப்பட்டது. ஆகவே தவறாக புரிந்து கொள்ள வேண்டாம். அந்த நாட்களில் இயேசுவுக்கு எதிராக காரியங்கள் செய்து அவரை ஏளனமாய் பார்த்தமை யாலும், அவரை மக்கள் சரியாக விசுவாசிக்காமையாலும் அந்த இயேசு வின் கர்த்தத்துவத்தை காண்பிக்கும் படியாய் அப்போஸ்தலர்நடபடியில் கூடுதலாக இயேசுவின் நாமம் என்று சொல்லப்படுகின்றது. ஏனென்றால் இயேசுவை தேவனாய் காண்பிப்பதற்காக.

**உண்மையில் ஞானஸ்நானம் பிதா குமாரன் பரிசுத்தாவியின்** நாமத்தில் கொடுக்கப்படுகின்றது. ஆகவே முதலாவது மனந்திரும்பி ஞானஸ்நானம் பெறவேண்டும். முன்னே வேறே பக்தியுள்ளவர்களாய் இருந்தோம். இப்பொழுது ஆண்டவரை ஏற்றுக் கொண்டுள்ளோம். உண்மையில் மனந்திரும்புதல் என்றால்: 'பாவத்தைக் குறித்தும், தேவனைக் குறித்தும் ஒருவனின் மனப்பாங்கில் உண்டாகும் அடிப்படை மாற்றம்'. முதல் பாவத்தை சந்தோஷமாய் செய்து கொண்டிருக் கலாம். தெய்வம், இரட்சகர் என்று சொல்லி வேறே யாரையும் நம்பிக் கொண்டிருக்கலாம். ஆனால் **உண்மை யான மனந்திரும்புதல் வரும் போது ஒருவன் தன்னுடைய வழியை ஆராய்ந்து பார்த்து நான் செல்லும் வழி தவறு என்று திரும்புவது.** ஒரு பக்கம் சென்றால் அதற்கு எதிராக திரும்புவது - இதுவே மனந்திரும்புதல். இதற்குரிய இன்னொரு அர்த்தம் **புதிய இருதயத்தை - மனதை பெற்றுக் கொள்வது.**

**மாற்கு 7:21-22 எப்படியெனில், மனுஷருடைய இருதயத்திற்குள்ளி ருந்து பொல்லாத சிந்தனைகளும், விபசாரங்களும், வேசித்தனங்களும், கொலைபாதகங்களும், களவுகளும், பொருளாசைகளும், துஷ்டத்தனங் களும், கபடும், காமவிகாரமும், வன் கண்ணும், தூஷணமும், பெருமையும், மதிகேடும் புறப்பட்டுவரும்.** தேவனைக் குறித்தும், பாவத்தைக் குறித்தும் அவனுடைய மனப்பாங்கில் மாற்றம் உண்டாகி உண்மையான தேவ வழியை நோக்கி பாவ வழியை விட்டு செல்பவன் ஞானஸ்நானம் பெறமுடியும். இதனைதான் பேதுரு சொல்கின்றார்:


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழைய ஆராதனை முறை, நம்பிக்கைகள், ஆண்டவருக்கு நிகராய் உருவாக்கப்பட்ட எல்லாவித அன்னியங்கள் எல்லாவற்றையும்விட்ட நபர் ஞானஸ்நானத்துக்குரிய முதலாவது தகைமையைப் பெற்றுக் கொள்கின்றான். தேவனுடைய பார்வையில் எங்களுடைய மனந்திரும்புதல் தெட்டத்தெளிவாய் தெரியும். தேவனுக்கு மறைக்க முடியாது.

மனந்திரும்புவதற்கு சகேயு நல்ல உதாரணம். அவன் மனந்திரும்பும் போது தன்னிடம் உள்ளது எல்லாவற்றையும் கொடுத்தான். எப்படி ஒப்புரவாக வேண்டுமோ அப்படி எல்லாம் ஒப்புரவானான். இயேசுவை எப்படி தெரிந்து கொள்ள வேண்டுமோ அப்படி தெரிந்து கொண்டான். அவன் உண்மையான மனந்திரும்புதலுக்குள்ளாய் வருகின்றான்.

## 02. விசுவாசித்தல்

**மாற்கு 16:15-16 பின்பு, அவர் அவர்களை நோக்கி: நீங்கள் உலகமெங்கும் போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள். விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான். விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாக தீர்க்கப்படுவான்.**

மனந்திரும்பி இயேசுவை விசுவாசித்து பாவங்களை அறிக்கை செய்யும் போது இரட்சிக்கப்பட்டோம் என்ற நிலைக்குள் ஒரு மனிதன் வரமுடியும். இரட்சிக்கப்பட்டவர்கள் இரட்சிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் காலத்தில் தேவ கட்டளைகள் அனைத்தையும் நிறைவேற்றும் ஒரு தூய்மையான வாழ்வை வாழவேண்டும். அப்போது நான் கிறிஸ்துவுடனே கூட பாவங்களுக்கு மரித்து அடக்கம் பண்ணப்பட்டு, அவருடனே கூட நீதிக்காக எழுந்திருக்கிறேன் என்ற அடையாளமான ஞானஸ்நானத்தை உலகத்துக்கு சாட்சியாக, அடையாளமாக காண்பிக்க வேண்டும். அப்படி வாழும் மனிதன் இரட்சிக்கப்படுவான். இந்த மனிதனுக்கு ஆக்கினைத்தீர்ப்பு இல்லை. தேவன் கொடுக்கப்போகும் அக்கினைத் தீர்ப்பு இறுதியான நியாயத்தீர்ப்பில் கிடைக்கும். அதே போல பிதாவின் சந்தோசத்திற்குள் பிரவேசிக்கும் இறுதியான இரட்சிப்பின் நிறைவும் கடைசி நியாயத்தீர்ப்பின் போது கிடைக்கும். அப்போது இரட்சிக்கப்படுவோம். முடிவு பரியந்தம் நிலைநிற்பவனே இரட்சிக்கப்படுவான். (மத்தேயு 10:22, மாற்கு 13:13, மத்தேயு 25:31-46). இரட்சிக்கப்படுவான் என்பதும்; ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான் என்பதும் இறுதியாக நியாயத்தீர்ப்பில் நடைபெறப்போவது.

**அப்போஸ்தலர் 8:26-39 (26.) பின்பு கர்த்தருடைய தூதன் பிலிப்பை நோக்கி: நீ எழுந்து, தெற்குமுகமாய் எருசலேமிலிருந்து காசா பட்டணத்துக்குப் போகிற வனாந்தர மார்க்கமாய்ப் போ என்றான். 27. அந்தப்படி அவன் எழுந்துபோனான். அப்பொழுது எத்தியோப்பியருடைய ராஜஸ்திரீயாகிய கந்தாகே என்பவளுக்கு மந்திரியும் அவளுடைய பொக்கிஷமெல்லாவற்றிற்கும் தலைவனுமாயிருந்த எத்தியோப்பி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யனாகிய ஒருவன் பணிந்துகொள்ளும் படி எருசலேமுக்கு வந்திருந்து 28. ஊருக்குத் திரும்பிப்போகும்போது, தன் இரதத்திலே உட்கார்ந்து, ஏசாயா தீர்க்கதரிசியின் ஆகமத்தை வாசித்துக் கொண்டிருந்தான். 29. ஆவியானவர்: நீ போய், அந்த இரதத்துடனே சேர்ந்து கொள் என்று பிலிப்புடனே சொன்னார். 30. அப்பொழுது பிலிப்பு ஓடிப்போய்ச் சேர்ந்து, அவன் ஏசாயா தீர்க்கதரிசி யின் ஆகமத்தை வாசிக்கிறதைக் கேட்டு: நீர் வாசிக்கிறவைகளின் கருத்து உமக்குத் தெரியுமா என்றான். 31. அதற்கு அவன்: ஒருவன் எனக்குத் தெரிவிக்காவிட்டால் அது எனக்கு எப்படித் தெரியும் என்று சொல்லி பிலிப்பு ஏறி, தன்னோடே உட்காரும்படி அவனை வேண்டிக்கொண்டான். 32. அவன் வாசித்த வேதவாக்கியம் என்னவென் றால்: அவர் ஆட்டைப்போல அடிக்கப்படு வதற்குக் கொண்டுபோகப்பட்டார் மயிர்க்கத்தரிக்கிறவனுக்கு முன்பாகச் சத்தமிடாதிருக்கிற ஆட்டுக்குட்டியைப் போல அவர் தமது வாயைத் திறவாதி ருந்தார். 33. அவர் தம்மைத் தாழ்த்தின போது அவருடைய நியாயம் எடுத்துப் போடப்பட்டது. அவருடைய ஜீவன் பூமியிலிருந்து எடுபட்டுப்போயிற்று அவருடைய வம்சத்தை யாரால் சொல்லிமுடியும் என்பதே. 34. மந்திரி பிலிப்பை நோக்கி: தீர்க்கதரிசி யாரைக் குறித்து இதைச் சொல்லுகிறார்? தம்மைக்குறித்தோ, வேறொருவரைக் குறித்தோ? எனக்குச் சொல்லவேண்டும் என்று கேட்டுக் கொண்டான். 35. அப்பொழுது பிலிப்பு பேசத்தொடங்கி, இந்த வேதவாக்கியத்தை முன்னிட்டு இயேசுவைக்குறித்து அவனுக்குப் பிரசங்கித்தான். 36. இவ்விதமாய் அவர்கள் வழிநடந்துபோகையில், தண்ணீருள்ள ஓரிடத்திற்கு வந்தார்கள். அப்பொழுது மந்திரி: இதோ, தண்ணீர் இருக்கிறதே, நான் ஞானஸ்நானம் பெறுகிறதற்குத் தடையென்ன என்றான். 37. அதற்குப் பிலிப்பு: நீர் முழு இருதயத்தோடும் விசுவாசித்தால் தடையில்லையென்றான். அப்பொழுது அவன்: இயேசுகிறிஸ்துவைத் தேவனு டைய குமாரனென்று விசுவாசிக்கிறேன் என்று சொல்லி 38. இரதத்தை நிறுத்தச் சொன்னான். அப்பொழுது பிலிப்பும் மந்திரியும் ஆகிய இருவரும் தண்ணீரில் இறங்கினார்கள் பிலிப்பு அவனுக்கு ஞானஸ்நானங்கொடுத்தான். 39. அவர்கள் தண்ணீரிலிருந்து கரையேறின பொழுது, கர்த்தருடைய ஆவியானவர் பிலிப்பைக் கொண்டு போய்விட்டார். மந்திரியும் அப்புறம் அவனைக் காணாமல், சந்தோஷத்தோடே தன் வழியே போனான்.

இதிலே மந்திரி வாசித்த வேதப்பகுதி ஏசாயா 53ஆம் அதிகாரம். அந்த 53ஆம் அதிகாரத்திலே இயேசு எங்களுக்காக பாடுபட்டார், அடிக்கப்பட் டார், நொறுக்கப்பட்டார், துன்பப்படுத்தப் பட்டார், வேதனைப்பட்டார், மிகக் கொடூரமான ஒரு நிலைக்குள்ளாக போனார் என்று அந்த வேதப்பகுதி மிகத்தெளிவாக காண்பிக்கின்றது. இந்த வேதப்பகுதியைத்தான் மந்திரி வாசிக்கும் போது அவனுக்கு விளங்க வில்லை. பிலிப்பு அதனைக் குறித்த விளக்கத்தினை கொடுக்கின்றான். அப்போது மந்திரி கேட்கின்றான், நான் ஞானஸ்நானம் பெறுவதற்கு தடை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ன? **அதற்கு பிலிப்பு நீர் முழு இருதயத்தோடும் விசுவாசித்தால் தடை இல்லை என்றான்.** இரதத்திலே கேட்ட விளக்கத்தின் மூலம் அவன் மனந் திரும்பிவிட்டான். ஞானஸ்நானம் பெறுவதற்கு இயேசுவே தேவன் என்று விசுவாசிக்க வேண்டும்.

ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ள வரும் ஒவ்வொருவரும் கிறிஸ்துவின் மீதுள்ள விசுவாசத்தை அறிக்கை செய்ய வேண்டும். இயேசு என்னுடைய பாவத்திற்காய் மரித்தார் என்று சொல்ல வேண்டும். அவர் தான் என்னுடைய பாவங்களை கல்வாரி சிலுவையில் சுமந்து தீர்த்தார். அவர் தான் மெய்யான தேவன் என்று விசுவாசத்தோடு அறிக்கை செய்ய வேண்டும், மறுபடி பிறக்க வேண்டும் என்றால் அறிக்கை அவசியம். கிறிஸ்து கொடுக்கும் புதுவாழ்வுக்குள்ளாய் பழைய காரியங்கள் எதுவும் வராதபடி பார்த்துக் கொள்ள வேண்டும். விசுவாசத்தில் தவறிப்போனால் நீதிமான்களாய் வாழமுடியாது. திரித்துவ தேவனை விசுவாசியுங்கள். இயேசு என் பாவத்துக்கான தண்டனையைச் செலுத்திவிட்டார் என்பதை விசுவாசியுங்கள்.

இரட்சிக்கப்பட்டேன் என்ற முதலாவது நிலையில் இருந்து உடனடியாகவே இரட்சிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறேன் என்ற நிலைக்குள் வருகின்றோம். மந்திரி மனந்திரும்பி விசுவாசித்ததன் மூலம் இரட்சிப்பின் முதலாவது கட்டத்திற்குள் வந்துவிட்டார். வந்த மந்திரி இரண்டாவது கட்டத்தில் செய்ய வேண்டிய ஞானஸ்நானம் பெற தகுதியானவராகின்றார்.

## 03. நல்மனச்சாட்சி

**1பேதுரு 3:21 அதற்கு ஒப்பனையான ஞானஸ்நானமானது, மாம்ச அழுக்கை நீக்குதலாயிராமல், தேவனைப்பற்றும் நல்மனச்சாட்சியின் உடன்படிக்கையாயிருந்து, இப்பொழுது நம்மையும் இயேசு கிறிஸ்துவினுடைய உயிர்த்தெழுதலினால் இரட்சிக்கிறது.**

ஞானஸ்நானம் தேவனைப் பற்றும் நல்மனச்சாட்சியின் உடன் படிக்கை. நோவா தேவன் சொல்லிய கட்டளையை நிறைவேற்றினான். தேவ கட்டளையை நிறைவேற்றிய எட்டுப்பேர் காக்கப்பட்டனர். தேவனைப் பற்றிய நல் மனச்சாட்சியின் உடன்படிக்கையானது ஞானஸ்நானத்தைப் பெற்று தேவ கட்டளையை நிறைவேற்றும் போது காக்கப்படுவோம்.

நல்மனச்சாட்சி என்று சொல்லும் போது கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலின் மீது வைக்கின்ற விசுவாசத்தின் மூலம் பெற்றுக் கொள்ள முடியும். ஞானஸ் நானம் எடுக்கும் ஒருவர் நல்மனச் சாட்சியை எப்படி காண்பிக்கலாம்? என்றால்

### I. பாவங்களை தாழ்மையுடன் ஒத்துக்கொள்ள வேண்டும்.

நீ களவு எடுத்தாய் என்று சொல்லும்போது யார் அதனை கண்டது? என்று எதிர்பேசினால் அது பாவத்தை மறைப்பதாகும். **பாவத்தை மறைக்கிற**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வன் வாழ்வடையமாட்டான்; அறிக்கை செய்து விட்டுவிடுகிறவனோ இரக்கம் பெறுவான். நான் தவறு செய்தேன், நான் பிழை விட்டேன் என்று ஏற்றுக் கொள்வதே நல்மனச்சாட்சி. இது இல்லாமல் ஞானஸ்நானம் பெறுவது ஞானஸ்நானம் அல்ல. சில வேளை களில் பாவம் செய்வோம்: ஆனால் பாவத்தினால் வரும் தண்டனை எங்களுக்கு நடக்காது. இதற்கு நல்ல உதாரணம்: ரோமர் நிருபத்தில் அப்போஸ்தலனாகிய பவுல் கூறுகின் றார், **ரோமர் 5:20 பாவம் பெருகுகிற இடத்தில் கிருபை பெருகிற்றே!** ஏன் இதனை கூறுகின்றார் என்றால், சரியான வாழ்வு வாழவில்லை. ஆனால் வசதியாயிருந்தார்கள், குறைவு இல்லை, இவர்கள் பாவத்தை செய்த பிறகும் அது பிரச்சினை இல்லை, நன்றாக இருக்கின்றோம் என்ற மனநிலை இருப்பதனை பவுல் கண்டு கொண்டார்.

**ரோமர் 6:1** ஒரு கேள்வி கேட்கின்றார் **அப்படி என்றால் பாவத்தில் தொடர்ந்து இருக்கலாமா?** என்று கேள்வி கேட்டு பதிலையும் கூறுகின்றார். **பாவத்தில் நாம் நிலைத்திருக்க கூடாதே!...** பாவம் பெருகுகின்ற இடத்தில் ஏன் கிருபை பெருகுகின்றதென்றால் 'எங்கே பாவம் பெருகுகின்றதோ அந்த பாவத்தில் இருந்து வெளியே வரும்படியாய் தமது கிருபையைக் கொடுக்கின்றார்'. என்னுடைய பிள்ளை மனந்திரும்பும் என்ற நோக்கத்தோடு தேவன் பொறுமை யாய் இருக்கின்றார். இந்த நாட்களில் கிருபை பெருகியிருக்கின்றது, யாரும் மனந்திரும்பி இயேசுவிடம் வரமுடியும். இவையெல்லாம் தேவன் கொடுக்கும் சந்தர்ப்பங்கள். ஒரு நாள் கிருபையின் நாட்கள் முடிந்து விடும்; அதற்கு பிற்பாடு மனந்திரும்பிவிட்டேன் என்று சொன்னாலும் தேவன் அதனை ஏற்றுக் கொள்ளமாட்டார். கிருபையாய் கிருபையின் நாட்களைத் தந்திருக்கின் றார். நாம் எல்லாரும் ஆண்டவருடைய பார்வையில் தகுதியுள்ளவர்களாய் வர வேண்டும். சீக்கிரமாய் பாவத்தைவிட்டு வெளியே வரவேண்டும்.

## II. நான் செய்த பாவத்தினிமித்தம் தேவனைத் திருப்திப்படுத்த இயேசு கிறிஸ்துவின் மரணமும் உயிர்த்தெழுதலும் திருப்திப்படுத்தியது என்பதனை நம்ப வேண்டும்.

என்னுடைய பாவத்தின் நிமித்தம் நான் மரணத்திற்கு பாத்திரவான் ஆனால் இயேசுவின் மரணமும் உயிர்த்தெழுதலும் பிதாவானவரை திருப்திப்படுத்தியது. பிதாவானவரு டைய நீதி நாங்கள் செய்த பாவத்திற் குரிய தண்டனையைக் கோரும் அந்த நேரத்தில் இயேசு கிறிஸ்து என்ன செய்வாரென்றால் **தன்னுடைய கரத்தில் இருந்து வடியும் இரத்தத்தை பிதாவிற்கு காண்பிப்பார். கிறிஸ்துவின் மூலமாய் பிதாவினுடைய கோபம் தணிகின்றது.** அதற்கு காரணம் என்ன, நாம் பெற வேண்டிய தண்டனையை இயேசு ஏற்றுக்கொண்டார்.

எனவே ஞானஸ்நானத்தைப் பெற்று ஆண்டவருக்கு பிரியமாய் வாழ வேண்டும் என்றால் இந்த நல்மனச் சாட்சி இருக்க வேண்டும். பாவத்தை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒத்துக்கொள்ள வேண்டும். நாம் பிதாவைக் கோபப்படுத்தினோம்; இயேசு தன்னுடைய மரணமும் உயிர்த்தெழு தலின் மூலமும் பிதாவை சாந்தப்படுத்தி னார் என்பதனை ஏற்று அதன்படி வாழ வேண்டும். **என்னுடைய ஸ்தானத்தில் இயேசு மரித்தார் என்று சாகும்வரைக் கும் ஏற்றுக்கொள்ள வேண்டும்.** சிலர் ஞானஸ்நானம் பெறும் வரைக்கும் பரிசுத்தம் போல் இருந்துவிட்டு ஒரு மாதம் செல்ல பழைய வாழ்க்கை வாழ்வார்கள். பிரியமானவர்களே அது அல்ல ஞானஸ்நானம். **இந்த நல்மனச் சாட்சி இருந்தால் சாகும்வரைக்கும் நாங்கள் புதுவாழ்வில் தொடர்ந்திருப் போம்.**

ஒரு ஊரிலே பெரிய சண்டைக் காரன் இருந்தான். அவன் ஒரு கட்டத்தில் இரட்சிக்கப்பட்டுவிட்டான். அவனுக்கு ஞானஸ்நானம் கொடுக்கப் போகின்றார்கள். அந்த நேரத்தில் மாற்றுவதற்காக அவர்களது ஆடைகளை ஒரு பையில் *(Bag)* வைத்து வைப்பார் கள். அந்த ஊர் வாலிபர்கள் நினைத் தார்கள் இந்த சண்டைக்காரன் எப்படி சாதுவாக மாறினான். இவரை ஒரு தடைவை பரிசோதித்து பார்க்க வேண்டும் என்று எண்ணி அவர் ஞானஸ்நான தொட்டிக்குள் இறங்கி ஞானஸ்நானம் எடுத்துவிட்டு மேலே ஏறிவரும் போது அவருடைய மாற்று ஆடைகளை இந்த வாலிபர்கள் ஒளித்து வைத்துவிட்டார்கள். அந்த நேரத்தில் இந்த சண்டியனுக்கு கோபம் வந்து விட்டது. இவர் சொன்னாராம் என்னு டைய மாற்று ஆடையை எடுத்தவர்கள் உடனே கொண்டு வர வேண்டும். இல்லையென்றால் என்னுடைய குணம் தெரியும்தானே என்றாராம். இங்கே இவருடைய பழைய குணம் சாகவில்லை, சுபாவம் மாறவில்லை. இப்படி ஞானஸ் நானம் எடுக்க வேண்டாம். சுபாவம் மாறட்டும், மனந்திரும்புங்கள், விசுவாசியுங்கள், நல்மனச்சாட்சியாய் இருங்கள்.

## 04. சீஷராகுதல்

**மத்தேயு 28:19-20 ஆகையால், நீங்கள் புறப்பட்டுப்போய், சகல ஜாதி களையும் சீஷராக்கி, பிதாகுமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர் களுக்கு ஞானஸ்நானங்கொடுத்து, நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவை யும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர் களுக்கு உபதேசம்பண்ணுங்கள். இதோ, உலகத்தின் முடிவு பரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன் என்றார். ஆமென்.**

இதிலே ஒரு கேள்வி கேட்க விரும்புகின்றேன், என்னவென்றால் 'சீஷராகுதல்' என்பது ஞானஸ்நானத் திற்கு முன்பு நடப்பதா? ஞானஸ் நானத்திற்கு பின்பு நடப்பதா? கிறிஸ்தவர் கள் அனேகர் நினைப்பார்கள் சீஷர் என்றால் விசுவாசிகளைவிட ஒருபடி மேலானவர்கள் என்று. ஆனால் உண்மையில் சீஷன் என்பதன் வரைவிலக்கணம் என்னவென்றால் "குருவைப் பின்பற்றுபவன்" சீஷன். ஆகவே ஒருவன் ஞானஸ்நானம் எடுக்க வேண்டும் என்றால் ஞானஸ் நானத்திற்கு முன்பதாகவே குருவைப் பின்பற்ற வேண்டும். இயேசு ஏற்றுக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்ட வாழ்க்கை முறைக்குள் தன்னை அர்ப்பணித்திருக்க வேண்டும். இயேசுவைப் பின்பற்றிக் கொண்டு வருகின்ற ஒருவன்தான் (இரட்சிப்பின் முதலாம்கட்டத்தை பெற்றுக்கொண்டவன்) ஞானஸ்நானம் எடுக்க முடியும். ஆகவே சீஷராகுதல் என்பது அது ஞானஸ் நானத்தின் முன் நடக்க வேண்டிய செயல். **சீஷராகுதல் இல்லாமல் அதாவது இயேசுவைப் பின்பற்றாமல் ஞானஸ்நானம் எடுக்க வேண்டாம்.** இயேசுவோடு நடக்க வேண்டும். அவர் தான் எங்களுடைய குரு.

சீஷர் என்பது ஞானஸ்நானத் துக்கு முதல் ஆரம்பித்து ஞானஸ் நானத்தின் பின் வாழ்வு முடியும் மட்டும் தொடர்ந்து போவது தான் சீஷத்துவம். இந்த நான்கு தகைமைகளும் இருந் தால் நீங்கள் ஞானஸ்நானம் எடுக்க முடியும். ஞானஸ்நானம் எடுத்தால் தான் பரலோகம் கிடைக்குமா? என்று உங்களுக்குள் ஒரு கேள்வி வரலாம்.

சிலுவையில் இருந்த கள்வன் ஞானஸ்நானம் எடுத்தானா? ஞானஸ் நானம் எடுக்கவில்லை. ஆனால் ஆண்டவர் சொன்னார்: இன்றைக்கு நீ என்னோடே கூட பரதீசில் இருப்பாய். மனந்திரும்புதலும், விசுவாசமும், நல்மனச்சாட்சியும் சீஷன் என்கின்ற அந்த நிலையும் அவனுக்குள் உருவாக் கப்பட்டிருந்தது. ஆனால் வெளிப்படை யான அடையாளம் பெற அவனால் முடியவில்லை.

கிறிஸ்து சிலுவையில் அறையப் படும்போது வலப்பக்கம் ஒரு கள்வனும், இடப்பக்கம் ஒரு கள்வனும் அறையப் பட்டிருந்தார்கள். ஒரு கள்வன் இயேசு வைப் பார்த்து நிந்திக்கின்றான். அதற்கு மற்றைய கள்வன் சொல்கின் றான்: நாங்கள் செய்த பாவத்திற்குரிய தண்டனையை அனுபவிக்கின்றோம். ஆனால் இவரோ நீதிமான். இவர் ஒன்றும் செய்யவில்லை என்றான். இதற்குள் என்ன அடங்குகின்றது: இயேசுவை தேவனாக நீதிமானாக கண்டான், பழைய காரியத்தைவிட்டு மனந்திரும்பிவிட்டான். நல்லதொரு மனச்சாட்சி இருந்தது. ஆண்டவர் சொன்னார்: **இன்றைக்கு நீ என்னோடே கூட பரதீசில் இருப்பாய்.** அவன் ஞானஸ்நானம் எடுக்கவில்லை. அவனுக்கு பரதீசில் இயேசுவோடு இடம் கிடைக்கிறது.

கள்வன் ஞானஸ்நானம் எடுத்தானா என்று கேட்கிறவனுக்கு நீங்கள் சொல்ல வேண்டிய பதில் என்னவென்றால்: நீங்கள் மனந் திரும்பி இயேசுவை விசுவாசித்த பின் அடுத்த நிமிடம் உங்களுக்கு மரண தண்டனை நிறைவேற்றப்படப்போகிறது என்றால் ஞானஸ்நானம் தேவை யில்லை. நீங்கள் அப்பொழுது தான் இயேசுவை அறிந்து எங்கும் போகமுடிய வில்லை, நடமாட முடியவில்லை, ஒரு இக்கட்டில் வாழ்கின்றீர்கள் என்றால் ஆண்டவருக்கு உங்களுடைய சூழ்நிலை தெரியும்.

இங்கே இந்தக் கள்வனுக்கு சந்தர்ப்பம் இல்லை, நாங்கள் இரட்சிக் கப்பட்டு எவ்வளவு காலம். நாங்கள் யாரும் சாட்டு சொல்ல முடியாது. உண்மையான சம்பவம் ஒன்றை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறவிரும்புகின்றேன்: வைத்தியசாலையில் நோயாளர்களை சந்திக்க செல்கின்ற வேளையில் ஒருவரை நான் சந்தித்தேன். அவருக்கு ஈரலில் பிரச்சினை இருந்தது. அதனால் அவரை வைத்தியர்கள் கைவிட்டுவிட்டார்கள். அவரை ஒரு ஓரமாய் படுத்தியிருந்தார்கள். அவர் அழுது கொண்டிருந்தார். ஐயா உங்களுக்கு என்ன நடந்தது? என்று கேட்டேன். அவருக்கு வார்த்தைகள் வரவில்லை. ஆனால் அழுகின்றார். அப்பொழுது நான் ஆண்டவரின் அன்பைச் சொல்லி ஆண்டவரை நம்புங்கள் அவர் உங்களுக்கு அற்புதம் செய்வார் என்றேன். ஒரு சந்தர்ப்பத்தில் அவர் தன்னுடைய பாவங்களை அறிக்கை செய்தார். மன்னிப்பு கேட்டார். நான் கண்டு கொண்டேன் அந்த நேரத்திலே ஒரு உண்மையான பாவ மன்னிப்பைப் பெற்றுக் கொண்டார். இயேசுவை என் இரட்சகராய் ஏற்றுக் கொள்கின்றேன் என்றார். ஆனால் அவருக்கு ஞானஸ்நானம் கொடுக்க ஒரு சந்தர்ப்பம் இல்லை. அடுத்த நாள் அவர் மரித்துவிட்டார். **நான் விசுவாசிக்கின்றேன் அந்த மரித்த மனிதன் இயேசுவுடைய மீட்டைப் பெற்றுக் கொண்டார்.** அவருக்கு சந்தர்ப்பம் இல்லை. அவரால் முடியாது. அதை ஆண்டவர் பார்த்துக் கொள்வார். ஆனால் எங்களுக்கு சந்தர்ப்பம் உண்டு. தேவன் கூறிய கட்டளைகளை நிறைவேற்றியே ஆகவேண்டும்.

நாங்கள் செய்ய வேண்டியது, உண்மையாய் மனந்திரும்பி விசுவாசித்து நல்மனச்சாட்சியுடையவர்களாய் சீஷர்களாய் மாறி கர்த்தர் தந்த இந்த கிருபையின் நாட்களிலே நாங்கள் அவருடைய கட்டளைக்கு கீழ்ப்படிய வேண்டும். நாங்கள் மூழ்கி ஞானஸ்நானம்பெறும்போது அவருடைய கட்டளைக்கு கீழ்ப்படிகின்றோம். இந்தப் பூமியிலே பாவத்துக்கு மரித்திருக்கின்றோம் என்று மக்களுக்கு சாட்சியாய் அறிவிக்கின்றோம். ஆகவே உண்மையாக மனந்திரும்புங்கள், விசுவாசியுங்கள், நல்மனச்சாட்சியுடையவர்களாய் வாழுங்கள். சீஷர்களாய் இயேசுவைப் பின்பற்றுங்கள். ஞானஸ்நானம் பெறுங்கள். பெற்றவர்கள் பரிசுத்தமாய் வாழுங்கள்.

**'தேவன் தாமே உங்களை நிறைவாக ஆசீர்வதிப்பாராக'**

---

அனல் 2022 ஆடி - ஆவணி மாதங்களில் கேட்கப்பட்ட நொடிக்கான விடை:

**கப்பற்சேதத்தில் தப்பினவர்கள் 276 பேர்**

அப்போஸ்தலர் 27:37

(பரிசுத்த ஆவியைப் பெற்ற சீஷர்கள் 120 பேர், மீனின் தொகை 2, கன்னிகைகள் தொகை 10, தேவாலயம் கட்ட ஆன வருடங்கள் 46)

(120x2=240-10=230+46=276)

(அப்போஸ்தலர் 1:14-15, அப் 2:1-4, யோவான் 6:9-13, மத்தேயு 25:1, யோவான் 2:19-20)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# யாருக்கு நன்றி

**வேதப்பகுதி: சங்கீதம் 103:1-10**

ரித்தீசுக்கு அவனுடைய அங்கிள் ஒரு சின்ன ஸ்போர்ட்ஸ் சைக்கிள் வாங்கிக் கொடுத்தார். நான் கர்த்தரிடம் ஒரு சைக்கிள் தரும்படி ஜெபித்துக் கொண்டிருந்தேன். கர்த்தர் என்னுடைய ஜெபத்தைக் கேட்டார் என்றான் ரித்திஸ். ரித்திஸ் நான்தானே உனக்கு சைக்கிள் பரிசாக தந்தேன். ஆனால் கர்த்தருக்கு நீ ஏன் நன்றி செலுத்துகின்றாய்? என்று கேட்டார் அவனுடைய அங்கிள்.

அங்கிள் கர்த்தர் தான் உங்கள் வழியாக எனக்கு சைக்கிள் தந்தார். ஏனென்றால் நான் அவரிடம்தான் ஜெபித்து வந்தேன் என்றான் ரித்திஸ்.

ஆம் நமக்கு பல நன்மைகள் மனிதர்கள் வழியாக வரலாம். ஆனால் கர்த்தர் தான் அவர்களைக் கொண்டு நமக்கு அவைகளைத் தருகிறார். எனவே எந்த ஒரு நன்மைக்காகவும் கர்த்தருக்கு நன்றி கூற நாம் மறக்கக்கூடாது.

**சிந்தனைக்கு:-**

நாம் கர்த்தரிடம் கேட்டதை அவர்
மனிதர்கள் மூலமாகத் தருவார்.
ஆனாலும் நாம் கர்த்தர் செய்ததை
மறந்துவிடக்கூடாது.

நன்றி: 'சின்னஞ்சிறு இதயங்களே கேளுங்கள் - ஆகஸ்ட் 21

## அனல் சந்தா விபரம்

இச் சஞ்சிகையைத் தொடர்ந்து பெற
விரும்புகிறவர்கள் உங்களது
பெயரையும், முகவரியையும் தெளிவாக
குறிப்பிட்டு சந்தாப்பணத்துடன்
ஆசிரியருக்கு அனுப்பி வைத்தால்
சந்தாதாரர்களாகச்
சேர்த்துக் கொள்ளப்படுவீர்கள்.

(காசோலை, காசுக்கட்டளை அனைத்தும்
"சீயோன் தேவாலயம்" / **ZION CHURCH**
என எழுதப்பட வேண்டும்)

## சந்தா விபரம் (தபால் செலவு உட்பட)

Subscription (Per Year S.L. Rs)

| | |
|---|---|
| இலங்கை (Sri Lanka) | 300.00 |
| இந்தியா (India) | 650.00 |
| கனடா, அமெரிக்கா (Canada & USA) | 1100.00 |
| சிங்கப்பூர், மலேசியா (Singapore & Malaysia) | 700.00 |
| மத்திய கிழக்கு நாடுகள் (Middle East Countries) | 900.00 |
| ஜேர்மனி, இங்கிலாந்து, இத்தாலி, அவுஸ்ரேலியா (Germany, England, Italy & Australia) | 900.00 |

*சந்தாதாரராக விரும்பின் பின்வரும் மாதிரிக் கூப்பனை தயார் செய்து சந்தாப்பணத்துடன் சேர்த்து அனுப்பி வைக்கவும்.*

## சந்தா மாதிரிக் கூப்பன்

பெயர்:..........................................

முகவரி:........................................

...................................................

...................................................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயேசு பிரதியுத்தரமாக: ஒருவன் ஜலத்தினாலும்
ஆவியினாலும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தில்
பிரவேசிக்கமாட்டான் என்று மெய்யாகவே
மெய்யாகவே உனக்குச்
சொல்லுகிறேன்.

யோவான் 3:5

To:

Zion Church Office,
No: 29, 29/1 Ramaiah Chettiar Lane,
Jaffna, Sri Lanka.







TO:
NOOLAGAM FOUNDATION
NO 55, SOMASUNDARAM AVE,
CHUNDIKULI,
JAFFNA

அச்சமைப்பு: வைத்தி பதிப்பகம் - தொ.பே: 0772002351

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org